உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

கொற்றவன்குடி உமாபதிசிவாசாரியர்

அருளிச்செய்த

திருவருட்பயன்;

இதற்குப் பதவுரையும்.

நிரம்பவழகியர் பொழிப்புரையும்,

இஃது,

காஞ்சிபுரம்

மகாவித்வான்

கந்தசாமிமுதலியார்

மாணாக்கர்

கா - சுந்தரமூர்த்திமுதலியார்

அவர்கள் பார்வையிட்டு,

கன்னிகைப்பேர்

முருகேச முதலியாரால்

சென்னை

ஜீவகாருண்யவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1898வரு

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

முகவுரை.

அலைகடல்சூழ்ந்தகிலவுலகின்கண் ஆன்மாக்களனைவற்றிற்கும் அருள்சுரந்தளிக்கும் அறப்பெருங்கடவுள் அன்பின்வழியறிந் தடிமைபூண்டொழுகும் சிற்றறிவுயிர்கள் சிற்சில விருப்பினும், கருணையிற்சிறந்த வொருபெருங்கடவுள் பழமையிற்பழமையாய்க் கல்வியறிவொழுக்கங்களாற் கற்றுணர்ந்தடங்கு மானிடர்கள் பாசத்தாற் சுழித்தலைத்துப் பவமாகிய கடலில் அழுந்தாவண்ணம் வேதங்களை யருளிச்செய்தனர் என்பது பலசமயத்தவற்கும் ஒப்பமுடிந்ததேயாம்.

அதனை யவரவர் கன்மத்தளவா மறிவுறுத்தும்ஆசாரியர்க ளநேகர் தோன்றி அவ்வவ்காலத்தில் அவ்வச் சமயங்களைச் சீடர்கள்கட்டுண் டொருவழிப்படஏற்படுத்தினமையால் சமயங்களும்தற்கேற்றநூல்களும்பலவாய்விரிந்தன.

அவ்வாறு பலவேறு பொருள்கொண்டு மயங்குறு வண்ணம் மெய்ப்பொருளே திருவெண்ணெய் நல்லூர் மெய்கண்டதேவராயவதரித்துச் சிவஞானபோதமென்னு நூலருளிச்செய்தனர்.

சிவஞான போதத்தை விரித்து அவர் மாணாக்கர் அருணந்திதேவர் சிவஞானசித்தி செய்தருளினர்.

அருணந்திதேவர் மாணாக்கராகிய மறைஞானசம்பந்தரிடம் அநுக்கிரகம்பெற்ற உமாபதிசிவாசாரியர்சிவஞானசித்தியைத் தொகுத்துச் சிவப்பிரகாசமெனயாவரும் எளிதிலுணரும்படி யோர்நூலருளிச்செய்தனர்.

உமாபதி சிவாசாரியர் தாம்செய்த சிவப்பிரகாசம் முன்னூற்கேற்ப முடிந்தமையாம் சிறிது விரிந்திருப்பதைப்பற்றி மிகுபக்குவமுடைய அடியார்க்குவருத்தமின்றி மனனமாகும்பொருட்டுத்திருவருட்செயலால்திருவருளடையும் திருவருட்பயனென் றிந்நூலருளிச்செய்தனர்.

இதற்குப் பதவுரைசெய்தவர் நாமம் பிரதிகளில்காணப்படவில்லை, ஆயினும் சித்தாந்தசாத்திரங்களுக்குப் பெரும்பாலும்பதவுரை வேலப்பபண்டாரம்செய்திருக்கின்றனர்; இவ்வுரையும் அந்நடையே கொண்டிருக்கின்றது.

சேதுபுராணஞ் செய்தவரும், சேதுமடாலய சைவாசாரியருமாகிய நிரம்பவழகியர், இந்நூலுக்குப் பொழிப்புரை யருளிச்செய்தனர்.

இவ் விருவகையுரையும் சிற்சிலவிடங்களில் விசேஷக் கருத்தடங்கி யிருப்பதாலும் சித்தாந்தநூலுணர்வோர் கல்விப் பயிற்சியில் சிறிதடைந் திருப்பினும் இவ்வுரைகளை வாசிப்பதால் பெரும்பய னெளிதிலடைந்து மிகவும் வித்தியாசாகர ராவாரெனவுங் கருதிப் பலர் தெரிவித்தபடி சேர்த்து அச்சிடப்பட்டது.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிறப்புப்பாயிரம்.

காப்பு.

நேசத்தடியர் நினைந்துருகி நின்றிட்ட
வாசத் தளைகடக்க மாட்டாது-பாசத்
திருகோட்டு முக்கட் சிவபெருமா னீந்த
வொருகோட்டு நால்வாயுவா.

நேரிசையாசிரியப்பா.

திருமகள்பிறந்த விரிதிரைப்பாற்கடற்
சூறையங்கடுங்காற் சுழற்றுபுவெடுப்ப
வலைவதறவெழுந் தண்டமீப்படர்ந்து
நிலைபெறநின்ற நெடுந்திரளன்ன
வின்னறீரின்ப நன்னலஞ்சுரத்தலின்
விளங்கெழிற்றருமந் திரண்டுவீற்றிருந்த
வண்ணமும்போலு மண்ணறன்கபிலை
காவலிற்புரக்குங் கண்ணுதற்கடவு
ணந்திதாள்சுமந்துவந் தவ்வழித்தோன்றற்
பெண்ணையாறுடுத்த வெண்ணெய்நின்றுருத்த
தொண்டர்களிதய முண்டகமலர்த்தும்
விஞ்சைவாளிரவி மெய்கண்டதேவன்
மறையகத்தடக்கிய வொருதனிக்குடிலையு
மருணூனிறைந்த பொருண்முழுதுணர்த்து
மாடிபோலக் கூடியகாட்சியிற்
புகல்சிவஞான போதநூறெருக்கத்த
வகல்பொருடேர்தற் கருமையுமாங்கவன்
சம்பிரதாயத் தந்தமிழ்வான்பொரு

ளுலவரப்பெருங்களி யுள்ளம்படைத்த
பண்பின்மேதகைய சண்பையர்கோமான்
றற்பலன்றேரரப் பற்பலசமயிகள்
மலைத்தலைக்கொண்மூ மாருதமறைந்தெனத்
தலைத்தலையிரியத் தானினிதுரைத்த
புகழ்சிவஞான போதமுள்ளுறையாந்
திகழ்சிவஞான சித்தியின்விரிவு
மென்போன்மருண்ட புன்புலமாக்க
டராவிடும்பையுந் திருவுளங்கொண்டுதன்
னாக்காதலி னாக்கியோனாகப்
பாவிடங்கொண்டதன் னாவிடங்கொண்டு
பவப்பிரகாசப் படரிருள்விழுங்குஞ்
சிவப்பிரகாசத் திருப்பெயர்மேவித்
திசைமகண்மருங்கிற் பரிவுடன்வளைத்த
நாலையின்றொகைக்கு நான்மடங்குடைய
சைவநூற்சலதி னொய்தினிற்கடத்து
மரக்கலமதற்கு மாலுமியொப்ப
வெழிலீணாத்தும் வழுவறப்புணர்த்தித்
தெள்ளுசீர்ப்புலமை வள்ளுவன்றனக்கோர்
நற்றுணையுடைத்தெனக் கற்றவர்களிப்ப
வருட்பயனென்றோ வதற்கொருநாமந்
தெருட்படப்புனைந்து செந்தமிழ்யாப்பிற்
குறளடிவெள்ளை யொருநூறியம்பினன்
மற்றவன்புலியூர் வளநகர்க்கீழ்பாற்
கொற்றவன்குடியிற் குடிகொண்டுறைந்து
பூசுரனுறைந்த புதுமதிவேணியுங்
காசறுங்கண்டமுங் கரந்த
தேசிகனுமாபதி சிவனென்பவனே.

சிறப்புப்பாயிர முற்றிற்று.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவருட்பயன்.

உமாபதிசிவனென்னும் பிள்ளைத்திருநாமத்திற்கும் இந்நூற்கும் முதல்வராகிய கொற்றவன்குடி முதலியார். அறம் பொருள் இன்பம் வீடு என்னு நான்கினுள் வீட்டுநெறிகாட்டுவான் றம்மாலெடுத்துக்கொள்ளப்பட்ட இலக்கியம் இடையூறின்றி யினிதுமுற்றுதற்பொருட்டு, ஆதிக்கண்ணே கரிமுகக் கடவுளை வணக்கஞ் செய்தருளுகின்றார். வழிபடு தெய்வ வணக்கஞ்செய்துமங்கலமொழி முதல் வகுத்தெடுத்துக் கொள்ளப்பட்ட இலக்கணவிலக்கியம் இடுக்கணின்றி யினிதுமுடியு மென்பாராகலின்.

காப்பு.

நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானங்
கற்குஞ் சரக்கன்றுகாண்.

என்பது அடைந்தோர்பாற் செய்யு நல்லருளினையுடைய யானைமுகத்தினையும், என்று மொருபடித்தா யிருக்கும் இளமையினையும் பெற்றகடவுளை, ஒருவர்மன மொழி மெய்களால் வந்திப்பாராயின், அவர்க்கு வேதாகம புராணமுதலிய கலைகள் யாவும் வருந்திக்கற்கும் பண்டமல்ல என்றவாறு. இதனாற்றானே யெளிதின் வருமென்பதாம்.

உலகத்து ஆனைகளெல்லாம்அடைந்தோர்பாற் றுன்பஞ்செய்தலின் இதனை நற்குஞ்சரக்கன்றென் றருளிச்செய்தார். யானையறிந்தறிந்தும் பாகனையேகொல்லும்என்றறிக. இஃதாகுபெயர்.

இந்நூலின் காப்பும் உரையும் சிறப்புப்பாயிரமும் அதன் முன்னுரைக்கும் உரையாசிரியர் காப்பும் சேது நிரம்பவழகியர் உரையிலிருந் தெடுத்துச் சேர்க்கப்பட்டன.

க - வ து ப தி மு து நி லை.

அஃதாவது மேலாகிய இறைவனது இயல்பு.
சிவனுக்குத் தன்னியல்பேதென்னில்?

அகர வுயிர்போ லறிவாகி யெங்கு
நிகரிலிறை நிற்கு நிறைந்து.

எ-து. அகரவுயிர்போல் - அக்கரங்களுக்கெல்லாம் அகரமாகிய வெழுத்துப் பிராணனாய்நின்றாற்போல,—அறிவாகி-ஆன்மாக்களுக்கெல்லா மறிவாகி,—எங்கும் - சடத்திலுஞ் சித்திலும்,—நிகரிலிறை-ஒப்பில்லாத கடவுள்,—நிற்குநிறைந்து-சர்வத்திர பரிபூரணனா யசைவற்றுநிற்பன் எ-று.

நி-வ-உ. அகரமாகியவுயிர்எழுத்துகளெல்லாவற்றிலும்பொருந்தி வேறறநின்றாற்போலத் தனக்கோர் உவமனில்லாத் தலைவன் உலகுயிர்முழுதும் ஒழிவற நிரம்பிஞானவுருவாய் அழிவின்றிநிலைபெறும்.

அகரம் தானேதனித்தும் ஏனையுயிருடம்புக்கெல்லாம் வேறின்றிப்புணர்ந்தும் நிற்றலானும், அங்ஙனம்புணர்க்கவழியுந்தன்னுருவுதோன்றாதாகலானும், முதற்கண் வைக்கப்படுதலானும், விகாரமின்றி நாதமாத்திரையா யியல்பாற்பிறத்தலானும், இறைவற்குவமையாயிற்று. இவ் வொப்புவமையாற் சடமாகியவொலிவடிவன்றென்பதற்கு அறிவாகியென்றும், அகரம்போல வொருகாற்புணர்ந்து நீங்காதென்பதற்கு நிறைந்தென்றும், அவ்வகரமு

தலிய வெழுத்துக்களு முட்படுதற் கெங்குமென்றும், மாணுக்கற் கறிவித்தற்பொருட்டு உவமஞெடுபுணர்த்தினும்அன்னதன்றென் பதற்கு நிகரிலென்றுங் கூறியருளினர்.

"அக்கரங்கடோறுஞ் சென்றிடு மகரம்போல் நின்றனன் சிவனுஞ்சேர்ந்தே" என் றருளிச்செய்தவாறுங் காண்க.

இதனு லிறைவன துண்மையும், அவன் வேறற நின்றமை யுங் கூறப்பட்டன.　　　　　　　　　　　　　　　　(க)

இப்படி மனம் வாக்குக் காயங்களுக் கெட்டாமலிருந்தாலா ன்மாக்கள் மலபரிபாகம் வந்து மோக்ஷமடைகிற தெப்படி யெ ன்னில்?

தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத்தருஞ்சத்தி
பின்னமிலா னெங்கள்பிரான்.

எ-து. தன்னிலைமைமன்னுயிர்கள்-தன்னுடைய நின்மலமா கிய சுவதந்திரத்தை நிலைபெற்ற வான்மாக்கள், சார-பொருந்த, —தருஞ்சத்தி-கூட்டு மருட்சத்தி. அதனுற் சத்தியுஞ் சிவமு மிர ண்டோவென்னில்?,—பின்னமிலா னெங்கள்பிரான் - இரண்டி ல்லாதவன் எங்கள்சுவாமி.

நி-வ-உ. வாக்குமனங்கட்கெட்டாத் தனது விமல ஞானுனந்தவீட்டினெல்லையை நிலைபெற்ற ஆன்மாக்கள்வந்துபொருந்து ம்படிசெய்யும் அருளாகிய பராசத்தியுடனே பேதமின்றி யொன் றிநிற்பான் எம்முடைய இறைவன்.

மன்னுயிர்களென்றதனுல் ஆன்மாக்கள்வினைவயத்தில்உரு வுந்தொழிலும் வேறுபடுவதன்றி நிலமுதல் நாதமீருகிய தத்துவ ங்கள்போலப் பிறந்திறப்பன வல்லவாம்.

இதனுல் அவன் ஓர் சத்தியோடும் கூடிநிற்பதென்பதூஉம் அது கருணைவடிவிற்றென்பதூஉம் கூறப்பட்டன.　　　　(உ)

அப்படி யும்முடையகடவுள் மகத்துவமோவென்னில்?

பெருமைக்கு நுண்மைக்கும் பேரருட்கும் பேற்றி
னருமைக்கு மொப்பின்மையான்.

எ-து. பெருமைக்கும்-ஆன்ம போதத்தாலே யறியப்படாத மகத்துவத்துக்கும்,—நுண்மைக்கும் - இப்படிப் பஞ்சகிருத்திய நடத்தையிலேயு மான்மாக்களாலே யறியப்படாத விரகசியத்துக்கும்,—பேரருட்கும் - ஆன்மாக்கள்மேல் வைத்த மிகுந்த கிருபைக்கும்,—பேற்றினருமைக்கும் - சரிதை கிரியாயோகங்கண் முடிந்த விறுதியிலே சாயுச்சியத்தைக்கொடுக்கப்பட்ட வாச்சரியத்துக்கும்,—ஒப்பின்மையான் - இவனுக்குவமையில்லை.

நி-வ-உ. எவ்விடத்துமுளதாய நிறைவினுனும், நொய்மையினுனும், மிகுந்த கருணையினுனும், ஒருவராற் பெறுதற்கருமையானும், ஆயவிந்நான்கினுந் தனக்கோ ரொப்புவமை யில்லாதான் முன்னங்கிளந்த எட்மிறைவன்.

இவ்வாற்ருல் தனக்குவமனில்லானுகவே மற்றனைத்தியல்பினுனும் ஒப்பிலனுதலினுல் உய்த்துணர்க.

" அண்டப்பகுதி யுண்டைப்பிறக்க
வளப்பருந்தம்மை வளப்பெருங்காட்சி
யொன்றினுக்கொன்று நின்றெழில்பகரி
னூற்றொருகோடியின் மேற்படவிருந்தன
வின்னுழைக்கதிரின் றுன்னணுப்புரையச்
சிறியவாகப்பெரியோ னெனவும்
செருமைக்கண்டமணுத்தா
வணுவண்டத்து
நின்றுநுணங்கிய தண்டாச்சீர்த்தி"

எனவு மருளிச்செய்தவாறு காண்க.

குவ்வுருபு மூன்றும்வேற்றுமைப்பொருள்தந்தது. "யாதனு ருபிற் கூறிற்றாயினும், பொருள்சென்மருங்கின் வேற்றுமை சாரும்" என்பதிலக்கணமாதலின்.

இதனாலிறைவன துயர்புகூறப்பட்டது. (௬)

இவனுக்கொப்பில்லை யென்பானேன், மூவரி லொருவனல்லவோ வெனின்?

ஆக்கியெவையு மளித்தாசுடனடங்கப்
போக்குமவன்போகாப் புகல்.

எ-து. ஆக்கி-பிரமாவையுண்டாக்கிச் சகத்தைச் சிருட்டிப்பித்து,—எவையுமளித்து-விட்டுணுவை யுண்டாக்கிச்சகத்தையெல்லாமிரட்சிப்பித்து,—ஆசுடனங்கப்போக்கு மவன் - முடிவின் மாயாமலத்திலே யெல்லாமடங் கச்சங்கரிக்குந் தன்மையையுடையகர்த்தாவாய்,—போகாப்புகல்-தானென்றுமுடிவில்லாம லந்தப் பிரமாவிஷ்ணு ஜகமெவையிற்றுக்கும் புகலாகிய வாண்டவனும்.

ரி-வ-உ-இனையனாகிய அக்கடவுள் ஒருவன்ஒருத்தி ஒன்றென்றுசுட்டப்பட்ட வுலகங்களெல்லாவற்றினையும் படைத்து நிறுத்தி யிச்சாஞானக்கிரியைகளுணராதவண்ணம் ஆன்மாக்களெல்லாம் மூலமலத்துடனே அடங்கியிருக்கும்படி அழித்தலைச்செய்யுந்தான் எஞ்ஞான்று நீங்காததோர் புகலிடமாயிருக்கும்.

ஆசுடனடங்க வென்றதனால் புனருற்பத்தி யுண்டென்பது கூறியதாயிற்று. "உயிரவையொடுங்கிப் பின்னுமுதிப்பதெனவன்பாலென்னிற் - செயிருறுமலத்தினாகும்" என் றருளிச்செய்தவாறுகாண்க.

இதனால் அவனொருவனே முத்தொழிற்கும் உரியனென்பது கூறப்பட்டது. (௭)

அவனுருவமோ வருவமோ வருவா ரூபமோவென்னில்?

அருவு முருவு மறிஞர்க் கறிவா
முருவ முடையா னுளன்.

எ-து. அருவுமுருவும்-அருவமுமுருவமுமருவா ரூபமுமாம், —அறிஞர்க்கு-அறிவான்மிக்கநாதாக்களுக்கு —அறிவாமுருவம்-ஞானமாகிய வருட்டிருமேனியை,—உடையானுளன்-உடைத்தானவனாயிருக்கின்றான்.

நி-வ-உ. சிவம் சத்தி நாதம் விந்து என்னும்அருவடிவுநான்கும், மகேசுரன் உருத்திரன் மால் அயனென்னும் உருவடிவு நான்குமுடையன், அவ்விறைவன் அறிவுடையாரது உள்ளத்தின் தோன்றும் ஞானவுருவினையு முடையனுகலான்.

அருவும்உருவும் உளனெனவே அருவுருவாகிய சதாசிவவடிவமென்பது கூறவேண்டாவாயிற்று.

"சிவஞ் சத்தி நாதம் விந்து சதாசிவன் றிகழுமீச - னுவந்துருளுருத்திரன் றன்மாலய னென்றினென் றுய்ப், பவந்தருமுருவ ருலிங் கருவநான் குபயமொன்று, நவந்தருபேதமாகநாதனா டிப்பனென்ப" என்றும் "குறித்ததொன்றுகமாட்டாக் குறைவிலனுதலானும்." என்றும்அருளிச்செய்தவாறுகாண்க.

இதனு லவனருவுருவு கூறப்பட்டன. (௫)

உடமையாகி லொருவருண்டாக்கிக் கொடுக்கவேண்டுமென்னில்?

பல்லா ருயிருணரும் பான்மையென மேலொருவ
னில்லாதா னெங்க ளிறை.

எ-து. பல்லாருயிருணரும் - சர்வான்மாக்களுந் தங்கட்குக் கத்தா சனுகரண புவனபோகங்களைத் தந்தறிவிக்கவறிகின்ற,—பான்மையென-முறைமைபோல,—மேலொருவனில்லாதான்—தானே யறிதலன்றித் தனக்குமேலொருவ னறிவிக்கவேண்டுவதி

ல்லே யாதலாற் ருனிணேந்த திருமேனியைத் தரித்துக்கொள்வன்—எங்களிறை-எமதுகத்தா.

நி-வ-உ. நிறைந்து எண்ணிறந்த ஆன்மாக்களும் அறிவிக்க வறியும் பகுதிபோலத் தனக்குமேலாய்நின்று உணர்த்துவதோர் கடவுளேயில்லாதான் எம்முடையஇறைவன்.

இதனுற் கடவுட்டன்மை யொருவராற்பெருது இயல்பாக வுடையன் என்பதுகூறப்பட்டது. (சு)

உம்முடையகத்தாவை எல்லாராலுமறியலாமோவென்னில்?

ஆனுவறிவா யகலா னடியவர்க்கு
வானுடர் காணு தமன்.

எ-து. ஆனுவறிவாய்-எவ்விடத்தும் நீங்காத பேரறிவாய்,—அகலானடியவர்க்கு - விட்டுநீங்கான் ஞானவான்களுக்கு,—வானுடர்காணுதமன்-தன்னேயறியாத பிரம விட்டுணுமுதலாகியதேவர்களுக்குஅவர்கள்மனவாக்குக்காயத்துக்கெட்டாதஞானவான்.

நி-வ-உ. நீங்காதஞானமாய் அடியார்கள்உள்ளக்கமலத்தினே விட்டு ஒருபொழுதும் பிரிதல்செய்யான், தான் தேவர்களால்காண்டற்கரிய மேலோனுயினும்.

அடியவரெனவும், வானுடரெனவும், பொதுப்படக் கூறினமையால் யாவராயினும் அன்பர்க்கெளியவனுதலும்அன்பரல்லாதவர்க்கு அரியனுதலும் உடையன்என்பதாம்.

"கனவிலுந்தேவர்க் கரியாய்போற்றி, நனவிலுநாயேற்கருளினேபோற்றி" என்றருளிச்செய்தார் போதவூர் புகழகம்போர்த்தமெய்யன், வாதவூர் வந்தமறைமுதற்றலேவர்.

இதனுல் அவன்அருள்புரியுமாறு கூறப்பட்டது. (எ)

உமதுகர்த்தா வேகதேசனே வியாபகனேவென்னில்?

எங்குமெவையு மெரியுறுநீர்போலேகந்
தங்குமவன் ருனே தனி.

எ-து. எங்குமெவையும் - சித்தினும் சடத்தினும்,—எரியுறு நீர்போல - அக்கினியைப்பொருந்தின சலம்போல,—ஏகந்தங்குப்-கத்தாவிரண்டற வேகத்துவமாய்ப் பொருந்திநிற்பன்,—அவன்றனே தனி-அந்தக்கடவுடானே யொப்பில்லாதவன்.

நி-வ-உ. எல்லா வுலகங்களிடத்தும் அளவிறந்த வுயிர்கண்மாட்டும் நீரிடைநின்ற தழல்போல இரண்டறக் கலந்திருந்தானுயினும் அக்கடவுள் அப்பதங்களிற்றங்காதுநீங்கி யேகனாய்நிற்பன்

ஏகாரம்-பிரிநிலை, “ பார்பதமண்டமனைத்துமாய்” என்பதனுள் “ நீருறுதீ ’ என்றருளிச்செய்தவாறுகாண்க.

நீருறுதீயென்பது, காய்ந்தபுனலின்கணுளதாயவெம்மை, இதனால் யாண்டுநிரம்பி நிற்பினும் அதிற்றோயானென்பது கூறப்பட்டது. (அ)

கத்தா வெங்குமொருப்படித்தாய் நிற்பனோவென்னில்?

நலமில னண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்
சலமிலன் பேர்சங்கரன்.

எ-து. நலமிலனண்ணார்க்கு-தன்னை வழிபடாதபேர்களுக்குத்தங்களாலேயுள்ள சனனமரணமாகிய துக்கத்தைநீக்கித் தன்னாலேயுள்ள வின்பநலத்தைக் கொடான்,—நண்ணினர்க்குநல்லன்-தன்னை வழிபட்டபேர்களுக்குத்துன்பத்தைநீக்கி யின்பநலத்தைத்தருவான். வழிபடாதபேர்க்குத் துன்பத்தைநீக்காமலும் வழிபட்டபேர்க்குத் துன்பத்தைநீக்கியு மிருக்கையினாலே பிரபஞ்சவாதியோவென்னில்?—சலமிலன் பேர்சங்கரன்-விருப்பு வெறுப்பில்லாதவன் சுகத்தை யான்மாக்க ளெவைக்குங் கொடுக்கையினாலே சங்கரனென்ற திருநாமத்தையுடையவன்.

தன்தாளினை யடைந்தார்மாட்டு நன்மையினைச்செய்யலும்; அதுசெய்யார்மாட்டு அது செய்யாதிருத்தலும் உடையனாயினும் வயிரமென்பது சிறிதுமிலன்; இன்பத்தினைப்பண்ணுஞ் சங்கரனென்னும் பெயரினையுடையான் ஆகலான்.

வடமொழியில் சம் என்பது சுகம், கரன் என்பது பண்ணு வான் இவையிரண்டும் புணர்ந்து சங்கரனெனநின்றது.

இதனால், விருப்பு வெறுப்பிலனென்பதும், அவரவர்செய்தி க்கொத்த பயனுதவும்நடுநிலைமையை யுடையவனென்பதுங்கூற ப்பட்டன. (௯)

வழிபட்டவர்களாலே யந்தப்பொருளைப் பெறலாமோ வெ ன்னில்?

உன்னுமுள தைய மிலதுணர்வா யோவாது
மன்னுபவந் தீர்க்கு மருந்து.

எ-து. உன்னும்-நினையுங்கள்,—உளது-உண்டு,—ஐயமிலது சந்தேகமில்லை,—உணர்வாயோவாது-அறிவுக்கறிவாய் விட்டுநீங் காது. அப்படி விட்டு நீங்காமலிருந் தென்செய்யுமென்னில்?— மன்னுபவந் தீர்க்குமருந்து-பொருந்திய சனனமரணமாகிய வியா தியைத் தீர்க்கின்றதற்கு நல்ல பரமௌஷதம்.

நி-வ-உ. ஞானமாய்ப் பிரிப்பின்றிநின்று அனாதியேதொட ர்ந்துவரும் பிறவிப்பிணியினை அறுத்தற்கு ஓர்மருந்தாந் தன்மை யினையுடையன் அக்கடவுள் அதற்குஓர்ஐயமில்லை, அதனையெஞ் ஞான்றும் இடைவிடாது அன்புடன் நினைப்பீராக.

இதனால் பதியினை வழிபடவேண்டுமென்பதும் உறுதிப்பா டுங் கூறப்பட்டன. (௰)

பதிமுதுநிலை முற்றிற்று.

உ-வது. பசு நிலை.

அஃதாவது பலவாய வுயிர்களது முறைமை.

இதனைப் பன்மைவாசகப்படுத்திய வதனால் பதியொன்றே யென்பதுதானே கொண்டுகிடந்தது. பதியினியல்புகூறிப் பசுக் களியல்பு கூறிற்முகலான், மேலையதிகாரத்தினோடு இதற்கியை

புடைத்து எனக்கொள்க. பசு உயிர்-சேதனன்-புற்கலன்-சிவன் அணு வியாபகன்-ஆன்மா-என்பன ஒருபொருட்கிளவி.

இதி லடைந்தவருண்டோவென்னில்?

பிறந்தநாண் மேலும் பிறக்குநாள் போலுந்
துறந்தோர் துறப்போர் தொகை.

எ-து. பிறந்தநாண்மேலும் பிறக்குநாள்போலும்-பிறந்த வர்ன்மாக்களுக்குத் தொகையுண்டானாற்போலவு மினிமேற்பிறக்குமான்மாக்களுக்குத் தொகையுண்டானாற்போலவும், துறந்தோர் துறப்போர் தொகை-தேகாதிப் பிரபஞ்சத்தைப் பொய்யென்று நீங்கி மோக்கத்தையடைந்தோர்க்கும் தொகையுண்டு, இனிமேலப்படி மோக்கத்தை யடைவோர்க்குந் தொகையுண்டு. அதற்குமளவில்லை இதற்குமளவில்லை.

ரி-வ-உ, உயிர்கள்தோற்றிய காலத்தினதுதொகையும், மேற்றோற்றுங் காலத்தினது தொகையும், இறைவன் திருவடியை அடைந்தாரது தொகையும். மேல் அடைதற்குரியாரதுதொகையும், தம்மிலொக்கும்.—இஃதளவிலவென்பதாம்.

ஈற்றினின்றதொகைநான்கினோடுங்கூட்டப்பட்டது. இதில் உயிருண்மை யுடைத்தெனக் கூறியது எதனாலென்னில் பொருளுண்மைபெற்றே அதனியல்பு கூறவேண்டும்; பித்திகையுடைத்தாயே சித்திரமெழுதவேண்டுமாறுபோல.

இதனாலுயிர்களதுஉண்மையும், மிகுதியுங்கூறப்பட்டன. ஆன்மாக்களெல்லா மொருபடித்தோவென்னில்?

திரிமலத்தாரொன்றதனிற் சென்றார்களன்றி
யொருமலத்தா ராயு முளர்.

எ-து. திரிமலத்தார்-ஆணவம் கன்மம்மாயையென்னுமும்மலத்தையுடைய சகலராயும்,—ஒன்றதனிற் சென்றார்கள் மாயா

மலத்தைநீங்கி மற்றிருமலமுமுடைய பிரளயாகலராகியும்,—அன்றி-அனைவயன்றி,—ஒருமலத்தாராயும் - மாபாமலத்தையும்கன்மமலத்தையும் நீங்கி மற்றொருமலமுடைய விஞ்ஞானகலராகியும், உளர்-இப்படி மூவகை யான்மாக்களாயிருப்பர்கள்.

நி-வ-உ. ஆணவம் கன்மம் மாயை என்னுமலங்கள்மூன்றுடையராகியும், இம்மூன்றில் மாயைநீங்கி யேனைய இரண்டுமுடையராகியும், அவ்விருவகையு மல்லாது ஆணவ மொன்றினையுமுடையராகியும், சொல்லப்பட்ட மூன்றுதிறத்தினையுடையார், அவ்வான்மாக்கள்.

ஆயுமென்பது மூன்றிடத்துங் கூட்டப்பட்டது. அவர்கள் நிரனிறையிற் சகலர் பிரளயாகலர் விஞ்ஞானகலராம். "உரைதருமிப் பசுவர்க்கமுணரின் மூன்றுமுயரும் விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர், நிரையின்மல மலங்கன்மமலங் கன்மமாயைநிற்கும்" என்றருளிச்செய்தவாறுங் காண்க.

இதனால் தொடர்பின் விகற்பத்தால் உயிர்கள் மூவகைப்பட்டதன்மை கூறப்பட்டது. (உ)

இவர்க ளொருவர்க்கொருவர் அதிகமோவென்னில்?
மூன்றுதிறத் துள்ளாரு மூலமலத் துள்ளார்க
டோன்றலர் தோற்றுள்ளார் துணை.

எ-து. மூன்றுதிறத்துள்ளாரும் - அம்மூவகைப்பட்டவான்மாக்களும், அநாதியிலே, மூலமலத்துள்ளார்கள்-ஆணவமலசம்பந்தர்களா யிருக்கிறவர்களாகையினாலே, தோன்றலர் தோற்றுள்ளார் துணை-தோன்றுத்துணையாயிருக்கிற சிவனுக்கு அடியவராயிருப்பர். அம்மூவர்க்குங் கத்தாவேதுணை.

நி-வ-உ. இம்மூன்றுதிறத் தான்மாக்களும்; மூலமலமாகிய ஆணவத்தாற்பிணிக்கப்பட்டவர்களே. அவருள், மாயையென்னுந்துணையினையுடைய சகலர், தாம்கட்டுற்றவொன்னுந் தன்மை தமக்குத் தெரிதலிலர்.

ஏனையிருவருக்குந் தெரியுமென்பதாம்.
மலமென்பது அழுக்கு. உம்மை-முற்றும்மை.

இதனால் முன்னரோவ்வொன்ருக நீக்கப்பட்டது மாயை யும் கன்மமும் அல்லதுஆணவமன்றென்பது கூறப்பட்டது.

அடிமையல்லாதவான்மாவுக் கறிவுண்டென்னில்.

கண்டவற்றை நாளுங் கனவிற் கலங்கிடுந்
திண்டிறலுக் கென்னோ செயல்.

எ-து. கண்டவற்றைநாளும் - நாளும்நனவிலே கண்டபொருள்களை நாடோறும்,—கனவிற்கலங்கியிடும் - சொப்பனத்திலே மறக்கப்படும். அப்படிப்பட்ட திண்டிறலுக்கென்னோசெயல் -அற்பவலிமையுள்ளவறிவில்லாத வான்மாக்களுக்குச் சுதந்தரமாகிய செயலேதுண்டு.

நி-வ-உ, பலகாலுஞ் சகலாவத்தையில் தாம் கண்டறிந்த பொருள்களைச் சொப்பன அவத்தையில் திரிபுடக்காணுந் திணிந்தவெற்றியினையுடைய வுயிர்களுக்குச் செயலுடைத்தென்பது எவ்வண்ணமோ?

திண்டிறலென்பது அன்மொழித்தொகையாய் இகழ்ச்சிக் குறிப்பு மொழியாய்நின்றது, திரிபுடக்காண்டலாவது-நல்குரவாளர்தமைச் செல்வராகவும், செல்வர்தமை நல்கூர்ந்தவராகவும்,உறுப்பில்லார்தமை யுறுப்புடையராகவும், உறுப்புள்ளார்தமை யுறுப்பிலாராகவும், ஒன்றுஒன்ருக மாறுபாடாகக்காண்டல் முதலியனவெல்லாம். (ரு)

சொப்பனத்திலேயல்லோ மறந்தான் நனவிலே தானேயறிவானென்னில்?

பொறியின்றி யொன்றும் புணராத புந்திக்
கறிவென்ற பேர்நன் றற.

எ-து. பொறியின்றி-ஐந்திந்திரியங்களி னொன்றிநல்லாமல், —ஒன்றும் புணராதபுந்திக்கு-ஒருவிடயங்களையு மறியாதவான் மாக்களுக்கு —அறிவென்றபேர் - தானேயறியுமறிவையுடைய னவென்றபேர்,—நன்றற-மிகவுநன்று.

நி-வ-உ. செவிமுதலிய கருவிகள்கூடாமல் யாதொருவிடயமும் எய்தமாட்டாத வுணர்வினையுடைய வுயிர்களுக்கு நூல்வல்லோர் அறிவுடையனவென்றிட்டபேர் மிகவும்அழகியது.

பொறியின்றியொன்றும் புணராதென்பதனால், கூடிப்புணருமென்பதாயிற்று. புந்தி ஆகுபெயர். நன்றென்பது முன்னையது போ லிகழ்ச்சிக் குறிப்புமொழி.

இவை யிரண்டுபாட்டானும் உயிர்கட்கோர்முன்னிலையான் அன்றி அறிவுந்தொழிலுங்கூடாமை கூறப்பட்டது. (ரு)

அப்படி இந்திரியங்களைக்கொண்டன்றி ஆன்மாவுக்கறிவில்லையோ வென்னில்.

ஒளியு மிருளு முலகு மலர்கட்
டெளிவி லெனிலென் செய.

எ-து. ஒளியும் - சோமசூரியாக்கினிப் பிரகாசமும், இருளும் - பூதவிருளும், உலகும் - பிரபஞ்சமும், அலர்கட்டெளிவிலெனில் - அலர்வித்த கண்ணுக்குப் பிரகாசமில்லையாயில், என்செய - இது மூன்று மிருந்து பிரயோசனமேது? அப்படிப் போல வொளியாகிய சிவமு மிருளாகிய வாணவமலமும் பிரபஞ்சமாகிய மாயையும் அலர்விழியாகிய வான்மாவுக்குஅறிவில்லையாகில் அம்மூன்று மிருந்துபிரயோசன மென்ன? ஆகையா லறிவே யான்மாவுக்கறிவுண்டு.

நி-வ-உ. விளக்கஞ்செய்யும் ஞாயிறு திங்கள் அங்கியென்னுஞ்சுடர்களும், மயக்கினைச்செய்யும் அந்தகாரமும், பலவகைப் பொருளோடு சிறந்த வுலகமும், விழித்திராநின்ற கண்ணினிடத்

துச்சோதியில்லையாயின் என்னபயனைச்செய்தற்பொருட்டு?எ-று. எனவே யாதுமின் றென்பதாம்.

இவ்வுவமையால் மிகுந்தபிரகாசமாகிய சிவனுடைய ஞானமும், இருளாகிய ஆணவமும், கலைமுதல் நிலனீறாகிய தத்துவங்களும், நித்தமாகியவுயிர்களிடத்து உணர்வில்லையாயின் என்னபயனைச்செய்யுமென்னும் பொருள்தோன்றிநின்றது. இஃது ஒட்டென்பதோ ரலங்காரம். இம்மூன்றுவகையினுநும் நன்று தீதுகளை யடைவனவுயிர்களேயா மென்பதாயிற்று.

இதனால் விளக்கவிளங்குங் கண்போல உணர்த்தஉணருமுணர்வினையுடைய தென்பதூஉங் கூறப்பட்டது. (௬)

ஆனவிந்த மூன்றுபொருளையு மறிவ தியாதென்னில்? பதிக்கும்பாசத்துக்குமறியவேண்டுவதில்லை, பசுவேபகுத்தறியுமென்றது.

> சத்தசத்தைச் சாரா தசத்தறியா தங்கணிவை
> யுய்த்தல் சதசத்தா முயிர்.

எ-து. சத்தசத்தைச் சாராது-சத்தாகியசிவம் அசத்தாகியபிரசத்தைப்பொருந்தாது,—அசத்தறியாது-அசத்தாகிய பாசஞ் சடமாகையா லஃதொன்றையும் அறியமாட்டாது,—அங்கண்-அவ்விடத்தில்,—இவை-இவ்விரண்டையும்,—உய்த்தல்-பொருந்தியறிகிறது,—சதசத்தாமுயிர்-சதசத்தாகிய வான்மா.

நி-வ-உ. நிலைபெற்ற ஞானமாகிய சிவனுக்கு அநித்தங்களானசடப்பொருள்களைப் புதிதாகச் சுட்டியறியவேண்டுவதில்லை அசேதனங்களாகிய தத்துவங்கட் கறிவென்பதில்லை. இவ்விரண்டுதன்மையாயின், அவ்விடத்திவற்றைத் தன் னுணர்வுசெலுத்திப்பகுத்தறியுமுயிர்கள் சத்தும் அசத்துமன்றியே சதசத்தாதல் வேண்டும். அல்லது கூடாதென்பது கருத்து,

உயிர்களுஞ் சித்தென்று வழங்கப்படுமாயினும் சிவனுடையஞானத்தினோ டொருதன்மை யல்லவென்பதாம்.

"சிவன்சிவனென்றிரண்டுஞ் சித்தொன்று மென்னிற்-சிவ னருட்சித்திவ னருளைச்சேருஞ் சித்திவன்றான், பவங்கேடு புத்தி முத்தி பண்ணுஞ்சித்தவற்றிற்-படியுஞ்சித் தறிவிக்கப்படுஞ்சித்து மிவன்று, னவன்றானேயறியுஞ் சித்தாதலினாலிரண்டு-மணைந்தா லுமொன்றாகா தந்நியமாயிருக்கு, மிவன்றானும் புத்தியுஞ் சித்தி வனுமோ புத்தி-யிதுவசித்தென்றிடி லவனுக்கிவனும்சித்தாமே'' என்றருளிச்செய்தவாறு காண்க.

இதனாலுயிர்கள் சுத்தவறிவுஞ் சடமுமல்லவாதல் கூறப்பட் டது. (எ)

அப்படியான்மாசத்தும் அசத்துமானதற் குவமையுண்டோ வென்னில்?

இருளி லிருளாகி யெல்லிடத்தி லெல்லாம்
பொருள்க ளிலதோ புவி.

எ-து. இருளிலிருளாகி - இருளோடுகூடி யிருளாயிருந்தும், எல்லிடத்திலெல்லாம்-ஒளியோடுகூடி யொளியாயிருந்தும்,— பொருள்களிலதோபுவி-இந்தப் பூமியின்கண்ணே யிப்படிக்கொ த்த பொருள்களில்லையோ? உண்டு. அதாவது, கண்ணும்-படிக மும்-ஆகாசமும்போல வான்மாவு மதுவதுவாக நின்றறிதற்குவ மையாம்.

நி-வ-உ. இருள்வந் திறுத்தகாலை மறைந்தும்ஒளிவந்திறுத் தகாலை விளங்கியுநிற்கும் பொருள்களை யுடையதன்றே வுலகம்.

பொருள்களென்ற பன்மையால் அவை கண்ணும் ஆடியும் விண்ணுமுதலாயின. ஓகாரம் எதிர்மறை. இதுவுமொட்டென்பு தோரலங்காரம்.

இதனால் சுத்தஉணர்வுஞ் சடமுமன்றி யிடைப்பட்டதொன் றில்லை யென்பானை யுண்டென மறுத்து மேல்வலி யுறுத்தப்பட் டது. (அ)

ஒளியு மணுதியேகூடி நிற்கவே ஒளியோடுங் கூடி நின்று இருளோடுங் கூடுவானேனென்னில்?

ஊமன்கண் போல வொளியு மிகவிருளே
வாமன்கண் காணா தவை.

எ-து. ஊமன்கண்போல-கோட்டானுடைய கண்ணுக்கு, ஒளியுமிகவிருளே-ஆதித்தப்பிரகாசமு மந்தகாரமாயிருக்கும். அதுபோல, வாமன்கண் காணாதவை - நிலைபெற்ற சிவஞானத்தை யான்மாக்கள் காணாமலிருக்கிறது, இருளாகிய வாணவமலத்தால்.

நி-வ-உ. உதயஞ்செய்து விளங்காநின்ற சூரியனைக்காணாத கூகையினது கண்போல முற்கூறிய வுயிர்களும் கருத்தாவாகிய சிவனுடையஞானத்தினைக் காணமாட்டா. அந்தஞானமும் அந்தக்கூகையினது கண்ணுக்குச் சூரியன் சிறிதுந் தோன்றாதுநின்றாற்போல வுயிர்களுக்குந் தோன்றாதுநிற்கும்.

உம்மை-சிறப்பும்மை. ஏகாரம்-தேற்றம்.

இதனாலுயிர்கள் தமக்குஉயிராகி விளங்கிநின்றஞானத்தினைக்காணாமைக்கு, உவமஞேடுபெடுத்திக் கூறப்பட்டது. (கூ)

இந்தவான்மாக்க ளறியாமையை நீங்கி யருளைப்பெறுவதெக்காலம்? என்றிரங்கியது.

அன்றளவு மாற்றுமுயி ரந்தோ வருடெரிவ
தென்றளவொன் றில்லா விடர்.

எ-து. அன்றளவும்-அனாதியேதொடங்கி,—ஆற்றுமுயிர்-சுமந்து தடுமாறப்பட்ட வான்மாக்களுக்கு,—அந்தோ-ஐயோ? அருடெரிவதென்று-அஞ்ஞானநீங்கிச் சிவஞானம்பிரகாசிப்பதுஎக்காலம்?,—அளவொன்றில்லாவிடர்-அளவில்லாத சனனமரணமாகியதுக்கத்தை யனாதிதொடங்கி யாற்றுமென்றிரங்கியது.

நி-வ-உ. அனாதியேதொடங்கி யிற்றைவரையும் எண்ணிறந்ததுன்பத்தினைத் தாங்கிநிற்கு முயிர்கள் அந்தோ எந்நாளோ

திருவருளாகிய ஞானத்தினைக் கண்டு தம்மிடும்பைதீர்ந்துபேரின்பத்தையெய்துநாள்.

அந்தோவென்ப திரக்கத்தின்கட் குறிப்பு.

இதனாலுயிர்படுந் துன்பமிகுதிக்கிரங்கிக் கூறப்பட்டது.

இவ்வதிகாரத்தை உமாபதிசிரியர் நிரம்பவழகியர் உயிரவைநிலையெனக்கூறினர்.

பசுநிலை முற்றிற்று.

ங-வது பாசநிலை.

இவ்வதிகாரத்திற்கு இருண்மலநிலை.

அஃதாவது, அறியாமையே வடிவாகிய ஆணவமலத்தினது தன்மை. உயிரவை நிலையென்பதுபோலப் பொதுப்படப் பாசங்களதுநிலையென்னாது இருண்மலநிலையென்றதனால், ஒழிந்த மாயை கன்மங்க ளெவ்வா றடங்குமோவெனின், "ஒருமொழியொழிதன் னினங்கொளற்குரித்தே" என்பதனாலடங்கும். முற்கிளந்த வுயிர்களாற் புணரப்பட்ட பாசத்தினியல்புகூறுதலின், மேலை யதிகாரத்தினோடிதற் கியைபுண்மையறிக என்றார் நிரம்பவழகியர்.

ஆன்மாவைப் பொருந்திய விடராவ தேதென்னில் ?

துன்றும் பவத்துயரு மின்புந் துணைப்பொருளு
மின்றென்ப தெவ்வாறு மில்.

எ - து. துன்றும்பவத்துயரும் - நெருங்கி யிருக்கப்பட்டசனனமரணமாகிய துக்கத்தையும்,— இன்பும் -பேரின்பமாகியவீட்டையும்,— துணைப்பொருளும் - எல்லாத்துக்குந் தாரகமாயிருக்கப்பட்ட திருவருளையும்,—இன்றென்பது - இல்லையெனச்செய்வது, — எவ்வாறுமில் - தானுமெவ்வழியானு மில்லையென்னும்படி மறைத்துநிற்கும் இந்த வாணவமலம்,

நி - வ - உ. தோன்றுதோட் டிடைவிடாதுவரும் பிறவித் துன்பமும், மேலாய வீட்டின்பமும், இவற்றைக்கூட்டி முடிப்பதாய் முதற்றுணை நிமித்தங்களும் இல்லையென் றறுதியிட்டுக் கூறுதல், கரண்டல்முத்லிய அளவைகளெல்லாவற்முனு மில்லை. (க)

இந்த வாணவமலத்துக் கொப்புண்டோ வென்னில் ?

இருளான தன்றி யிலதெவையு மேகப்
பொருளாகி நிற்கும் பொருள்.

எ - து இருளான்தன்றி - பூதவிருளானது தன்னைக் காட்டுதலன்றி,—இலதெவையும் - எல்லாப் பதார்த்தத்தையுங் காட்டாமன் மறைத்து,—ஏகப்பொருளாகி-தானொரு பொருளாகி,நிற்கும்பொருள் - ஆணவமலமான திப்படி நின்றுவிடும்.

நி - வ - உ. உலகத்து வெவ்வேறு பலவகைப்பட்ட குணங்களையுடைய பொருள்க ளெல்லாவற்றினையும் ஒருபொருளாக வேற்றுமை தோன்முது மறைத்துக்கொண்டு நிற்பது இருளுருவானதற் கன்றிப் பிறிதொரு பொருட்கில்லை.

ஆதலா லிதுபோலப் பிறப் பிறப்புக்களும், வீட்டுநெறியும், காரணங்களும், பகுத்தறியாதபடி மறைத்தது ஆணவமென்ப தாயிற்று.

இவை யிரண்டுபாட்டானும் ஆணவத்தினது உண்மையும், அஃதிருள்போல மருள்வடிவிற் றென்பதூஉம், கூறப்பட்டன.

இருள்போலத் தானோ வென்னில் ?

ஒருபொருளுங் காட்டா திருளுருவங் காட்டு
மிருபொருளுங் காட்டா திது.

எ - து. ஒருபொருளுங் காட்டா திருளுருவங் காட்டும்-பூதவிருளா னதெல்லாப் பதார்த்தத்தையு மறைத்துத் தன்னைக்காட்டி நிற்கும்,—இருபொருளுங் காட்டாதிது - இந்தவாணவமலமானது தன்னையுங் காட்டாது தனக்குள்ளே யிருக்கிற வான்மாவையுங் காட்டாது.

நி - வ - உ. அந்தகாரமானது வேறொரு பொருளையுங் காணாமல் மறைத்துத் தன்னுருவங் காட்டிநிற்கும், ஆணவமானது தன்னுருவத்தையும் ஞானத்தையுங் காட்டாமல் நிற்கும்.

இதனா லிவ்விருளினு மிகக்கொடியது ஆணவமென்று கூறப்பட்டது.

காட்டாமல் மறைப்பது பதிக்குமோ வென்னில் ?

அன்றளவி யுள்ளொளியோ டாவி யிடையடங்கி
யின்றளவு நின்ற திருள்

எ - து. அன்று - அனாதியே,—அளவி - ஆத்மாவைப்பொருந்தி,—உள்ளொளியோடாவி யிடையடங்கி - சிவஞானத்தைப் பிராணனா யுடைய வான்மாவைப் பொருந்தி மறைத்து,—இன்றளவு நின்ற திருள் - சிவனது திருவடித் தாமரையைப் பெறுமளவு நின்ற திந்தவாணவ மலம்.

நி - வ - உ. அகவிளக்காகிய ஞானத்தினோடே தானும் அனாதியே கலந்துகொண்டு அந்த ஞானத்தின்மேற்படாதஉயிரளவிலே யமைவுற்று இதுநாள்வரையும் நீங்காது நின்றது ஆணவமாகிய அந்தகாரம்.

உள்ளொளியோடு என்பது உயர்வின்கண்வந்தது. "ஒருவினையொடுசொ லுயர்பின் வழித்தே" என்பதிலக்கண மாதலின்.

இதனால் ஆணவமாகிய அந்தகாரம் அனாதியென்பதும், மாயைகருமம்போலநீங்கிப்புணர்ந்த தன்றென்பதும் கூறப்பட்டன, அப்படி யிவனிடத்திலே யடங்கியிருக்கப்பட்ட வாணவமலத்தை யிவனாலே யறியப்படாதோ வென்னில் ?

பலரைப்புணர்ந்து மிருட் பாவைக்குண் டென்றுங்
கணவற்குந் தோன்றாத கற்பு.

எ-து. பலனாப் புணர்ந்தும் - எல்லா வான்ம வர்க்கங்களையும் பொருந்திப் புணர்ந்தும்,—இருட்பாவைக்குண்டு இருண்மலசத்திக்குண்டு, — என்றுங்கணவற்குந் தோன்றாதகற்பு - எப்போதுந் தன்பத்தாவுக்கு விபசாரியென்றது தோன்றாத கற்புடைய தன்மை - இந்த வாணவமல மான்மாக்களுக்குத் தோன்றாமனிற்பு திப்படியென்க, இது முடிந்தகுறளிற்கருத்துரை.

நி-வ-உ. எண்ணில்ராகிய ஆன்மாக்களைப் பேதமறக் கலந்து இடையறாது நின்றாலும், இருள்மலமாகிய மகளுக்கொருநாளுந் தனது தலைவராகிய ஆன்மாக்களுக்குத் தன்னைக்காட்டாது நிற்பதோர் நியமமுண்டு.

பாவையெனவுங் கணவனெனவுங் கூட்டம்பற்றி யுருவகஞ் செய்ததன்றி ஆண்குறி பெண்குறி யவ்விடத் தில்லையெனக் கொள்க. என்றும் என்றதனால் கேவலசகல சுத்த மூன்றினுமென்பது பெற்றாம். சிறப்பும்மை யிரண்டனுள், பின்னரதுஇழிபுகுறித்து நின்றது. இடைநின்ற உம்மைமுற்றும்மை.

இதனா லாணவத்தினது தன்மைகூறப்பட்டது. (௫)

இந்த வாணவமலத்தை யறிவதெவ்வாறென்னில்?

பன்மொழிக ளென்னுணரும் பான்மை தெரியாத
தன்மையிரு ளார்தந் தது.

எ-து. பன்மொழிக ளென்னுணரும் பான்மை தெரியாததன்மை - பலவாகச் சொல்லுவதென்ன? நித்திய அநித்தியத்தை அறியப்படாத முறைமை,—இருளார்தந்தது-இந்தவாணவமலங் கொடுத்ததென்றறிவாயாக.

நி-வ-உ. பற்பலவார்த்தைகளாற் பயனென்னை? அறியவேண்டும் பொருள்களையறியும் பகுதிதோன்றாது நின்றவியல்பெல்லாங் கருமைநிறத்தினையுடைய மூலமலமாயினார் கொடுத்தது.

அறியவேண்டும்பொருள்களாவன பதி பசு பாசமெனுமூவகைப்பொருள்களும், சரியை கிரியை யோக ஞானங்களென்றநால்வகையொழுக்கமுமாம். இருளாமென்பது செறலின்கண் வந்த அக்றிணை வழுவமைதி.

இதனால் மூலமலத்தினால்வந்த அறியாமைவலியுறுத்தப்பட்டது. (சு)

ஆணவமல மில்லையென்னில்?

இருளின்றேற் றுன்பே னுயிரியல்பேற் போக்கும்
பொருளுண்டே லொன்றாகப் போம்.

எ-து. இருளின்றேல்-ஆணவமல மில்லையென்று நீசொல்லுவாயாகில்,—துன்பேன்-சுகதுக்கவேதனை வருவானேன்,—உயிரியல்பேல்-ஆன்மாவுக் கியற்கையென்று சொல்லுவையென்னில் (இயற்கையாவது கறுப்பும்வெளுப்பும்கரிக்கும்பாலுக்குமியற்கையானாற்போலவாம்),—போக்கும் பொருளுண்டே லொன்றாகப் போம்-அப்போதாணவமல நீங்குகிறபொழுது ஆன்மாவுங்கூடக்கெடுவன்-ஆகையாற் குணமுங் குணியுமாகச் சொல்வதடாது.

ங-வ-உ. இருளாகிய அவிச்சையில்லையாயின், இந்திரியங்கட்கு ஏவல்செய்யும் பிறவித்துன்பம் படற்குக் காரணமென்னை? அஃது ஆன்மாவினது சுபாவமாயின் நீங்காது, நீக்குஞ்சிவஞானமுண்டாயின் அதனுடனே உயிருங்கெட்டுப்போமாதலால்-எனவே பிறவித்துன்பத்துக்கு நிமித்தம் அவிச்சையென்பதாயிற்று.

இதனால் அவிச்சையில்லையென்பாரை யுண்டென்றுமறுத்துக்கூறப்பட்டது. (எ)

ஆணவித்தமலம் நடுவேவந்ததென்னில்?

ஆசா தியேலணவ காரணமென் முத்திநிலை
பேசாதகவும்பிணி.

எ-து. ஆசாதியேல்-ஆணவமலமாதியெனறல், அணவகாரணமென்-இடையிலேவந்து பொருந்தக்காரணமென்ன? பொருந்தக்காரணமுண்டு, வெள்ளைப்புடைவையி லழுக்குப்போலவுங் கண்ணுடிக்குக் காளிதம்போலவுமென்னில்,—முத்திநிலை பேசாது - மோக்ஷமுண்டென்று சொல்லவேண்டுவதில்லை,—அகவும்பிணி-இந்தமலமாகிய வியாதி மோக்ஷத்திலும்வந்து பொருந்தும்.

நி-வ-உ. அவிச்சை யிடையிட்டுவந்ததாயின், அஃதோர்காரணமில்லாமல் வந்துபொருந்தியதென்னை? அன்றி முத்தியினுமுறையாடாதுவந்து கவர்ந்துகொள்ளுமன்றோ.

உறையாடாது கவர்தல்-தோன்றாது விரைவிற்கவர்தல்.

இதனால் அவிச்சையாதியென்பாரை, மறுத்துக் கூறப்பட்டது. (அ)

அறுதியாகி லொருக்காலு நீங்காதென்னில்?

ஒன்றுமிகினு மொளிகவராதே லுள்ள
மென்று மகலா திருள்.

எ-து. ஒன்றுமிகினும்-பூதவிருள்மேலிட்டகாலத்து,—ஒளிகவராதேல்-விளக்கினெளி யவ்விருளைச் சற்றேநீக்கும், அப்படி நீக்காதென்றால்,—உள்ளமென்றுமகலாதிருள்-அதுபோலவாணவமல்மான தொருக்காலு மான்மாவை விட்டுநீங்காது, ஆணவமலமானது கலாதிக்கிடங் கொடாதேயிருந்தா லாசாரியராலும்நீங்காது, கலாதிகளுக் கிடங்கொடுக்கையினுலே யாசாரியராலேநீங்குமென்றறிவாயாக.

நி-வ-உ. மலமாயையென்னு மிரண்டினுள், மலமாகியவிருள்வியாபகமெல்லா மறைத்ததாயினும், ஏகதேசவிளக்கமாகியமாயாகாரியத்தினை யுயிர்கள்கவர்ந்து கொள்ளாதாயின் எந்தஞான்றும் அவ்விச்சை யவைகளைவிட்டு நீங்குவ தில்லை-கவருந்தன்மை யுயிர்களுக்குண்டாகவேண்டுமென்பது கருத்து.

என்றுமென்ப தருளுதையமானகாலத்திலு மென்பதுகாட்டிநின்றது.

இதனுலுயிர்கள் அவிச்சைநீங்கி முத்தியடைவதற்கோர்நிமித்தங் கூறப்பட்டது. (கூ)

மலமறையாது மாயை மறைக்குமென்னில்?

விடிவா மளவும் விளக்கனைய மாயை
வடிவாதி கன்மத் துவந்து.

எ-து. விடிவாமளவும்-பூதவிருணீங்குமளவும், விளக்கனைய-விளக்கானது பிரகாசித்து நின்றாற்போலவும், மாயைவடிவாதி கன்மத்துவந்து. மாயை கன்மத்துக்கீடாகத் தனுவாதியாகவிரிந்துகன்மமுள்ளமட்டுஞ் சீவித்துநிற்கும். திருவருள்விளங்கினவிடத்துவிடிவளவில் விளக்கொளிமழுங்கினாற்போலமாயைசீவியாது

நி-வ-உ. சிவனுடைய ஞானமாகிய கிரணந்தோன்றி ஆணவவிருள்நீங்குமளவும், மாயையினிடத்திலேநின்றுந் தனு கரண புவனபோகங்கள் சத்தம் புண்ணியபாவங்களுக்கீடாகத்தோன்றிச்சிறிதே மலவிருளினைநீக்கி விடயவின்பங்களைக் காட்டும்விளக்குகள்போலவாம்.

மலமுமாயையும், இருளுமொளியும்போல்த் தம்முள் மாறுடைத்தென்பதாயிற்று.

சிறிதேநீக்குதல் - விளக்கனைய-என்பதனாற்பெற்றும். விடிவாமளவும் என்றதனுன் மாயாகாரியங்கள் சங்காரகாலத்திற் றமதுகாரணத்தினுலேயடங்கினும் உயிர்களைவிட்டு நீங்கினவன்றென்பதாம் "இருளிரிசுடரிரண்டாநின்ற முழுமலமாயை" என்றருளிச்செய்தவாறுகாண்க.

இதனுல் அவ்வவிச்சையால் நீங்காது தொடர்ந்துநின்றமாயைகருமம், இரண்டின்முறைமையுங் கூறப்பட்டது.

பாசநிலைமுற்றிற்று.

ரு-வது அருளதுநிலை

அஃதாவது-கருணையுருவாகிய ஞானத்தின்முறைமை. இத்தன்மையவாகிய அவிச்சையைத் துறந்து வீட்டுநெறி காட்டுதற்பொருட்டு அதற்கு மாறாகிய அருளினது முறைமை கூறவின், மேலைஅதிகாரத்தினோடிதற் கியைபுண்மையறிக.

விடிவாவ தேதென்னில்?

அருளிற் பெரிய தகிலத்து வேண்டும்
பொருளிற் றலையிலது போல்.

எ-து. அருளிற்பெரியது-திருவருளுக்கு மேலாகிய தொருபொருளில்லை, அஃதெதன்போலவென்னில், அகிலத்துவேண்டும் பொருளிற் றலையிலதுபோல் - பூமியினிடத்தான்மாக்கள் அவரவர் விரும்புமபதார்த்தத்துக்கு மேலானதொருபொருளில்லாதது போல.

கி-வ-உ. ஒருவர்க் கெல்லாப்பொருள்களுள்ளுந் தாம்விரும்பிய பொருளின் மேலாயபொருளில்லாதவாறுபோலத் திருவருளின் மிக்கதாகியபொருள் உலகத்தில்லை.

இதனு லருளினது உயர்வுகூறப்பட்டது. (க)

அருளதுநின் றென்னசெய்யுமோ வென்னில்?

பெருக்க நுகர்வினை பேரொளியா யெங்கு
மருக்கனென நிற்கு மருள்.

எ-து. பெருக்கம்-சஞ்சிதமிகுதியுங் கட்டுப்படவும், நுகர்-பிராரத்துவமிகுதியும் புசிக்கவும், வினை-ஆகாமியமேறவும், பேரொளியாய்-இதுகளுக்கெல்லா மிகுந்தபிரகாசமாய். நிற்கும்-நிற்கும், எங்கும்-எவ்விடத்தும், அருள் - திருவருளானது. அதற்குவ்மையென்னென்னில்? அருக்கனென-ஆதித்தனுலேசகத்துக்குக் காரியப்படுவதுபோல.

நி-வ-உ. உலகத்து மக்கட்டொகுதிகள் பொருளினை யீட்டவும் துய்க்கவும் நிமித்தமாய்நின்ற சூரியனைப்போல, அருளும்உயிர்களெல்லாம் புண்ணியபாவங்களை வளர்க்கவும் அவற்றின் பயனாகிய சுகதுக்கங்களை யருந்தவும் காரணமாய்மிகுந்தவொளியாகி யெவ்விடத்தும் நிறைந்திருக்கும்.

அருக்கனென என்றதனால், அவ்வாறு காரணமாதல் ஒருவராற் செய்துகொள்ளப்பட்ட தல்லவாம். பொதுப்பட வினையென்றதனால் புண்ணியபாவ மிரண்டுமாம். சூரியனைப்போல வோரிடத்துண்டாயகாலை யோரிடத் தின்றாயிருப்பதில்லையென்பார், எங்கு மென்றருளிச்செய்தார்.

இதனால் அருள்காரணமாதல் கூறப்பட்டது. (உ)

அருள்காரியப்படுத்த வேண்டுவதில்லை, தானே செய்துகொள்வார்களெனில்?

ஊனறியாதொன்று முயிரறியா தொன்றுமிவை
தானறியா தாரறிவார் தான்,

எ-து. ஊனறியா தொன்றும்-சரீரஞ் சடமாகையால்தொன்றையுமறியமாட்டாது, உயிரறியாதொன்றும்-ஆன்மா சிற்றறிவாகையினாலே தான்தனக்கென வறிவில்லை, இவை தானறியா தாரறிவார்தான்-இந்தத் திருவருளறிந்து புசிப்பியாதபொழு தாரறிந்துபுசிப்பார்,

நி-வ-உ. அசேதனங்களாகிய தத்துவங்கட்கு எஞ்ஞான்றும் அறிவுண்டாவதில்லை, உயிர்கள் யாதொன்றுந் தாங்களாய் அறியமாட்டா, ஆதலால் அந்தஅருள் தாமறிந்தறிவியாமல் உலகத்தின்கண் அறிவினைப்பெறுவார் யாவர். அருளறிந் தறிவித்தே யறியவேண்டுமென்பதாம்,

இதனாலருளிற்கு அறியவேண்டுவ தில்லையென்பானை உயிர்கட்கறிவித்தற்பொருட்டு வேண்டுமெனமறுத்துக்கூறப்பட்டது.

இப்படி நடத்துகின்ற வருளையான்மாக்களறியாமலிருக்கிற தெப்படியென்னில்?

பாலாழி மீனுளும் பான்மைத் தருளுயிர்கள்
மாலாழியாளு மறித்து.

எ-து. பாலாழி மீனுளும்பான்மைத்து - பாற்சமுத்திரத்திலே திரிகிறமீனானது அப்பாலைக்குடித்துப் பசிதீராமற்றனக்குக் கீழாகிய ஜந்துக்களைத்தின்கிற முறைமைபோல, அருளுயிர்கள் மாலாழியாளுமறித்து - அருட்கடலிலே யிருக்கிற வான்மாக்கள் சிவாநுபோகங்களைப் புசித்து ஜநந மரணங்களைப் போக்கிக்கொள்ளாமற் சத்தாதிவிடயங்களிலே திரியும்.

நி-வ-உ. மேலாய வருளின்கட்பட்ட வுயிர்கள், அதனோடு பொருந்திநின்று பேரின்பத்தைநுகராமல் மாயாபோகமாகியமயக்கவேலையு ளாழ்ந்து அழுந்துந்தன்மை, திருப்பாற்கடலின்கண் வைகியமீன்கள், பாலைப்பருகாது, அதனுள்சிறிதாயபிராணிகளை வருந்தித் தேடியுண்ணு முறைமையினை யுடைத்து.

மீன்களும் பாலைப்பருகுமாயின், ஜந்துக்களைத்தேடியொருகாற்கிடைத்துங் கிடையாதும் உழலாமல், நின்றநிலையிலேவேண்டுமளவும் பருகும், உயிர்களும் அருளினோடுகலந்து நிற்குமாயின் சிற்றின்பங்களைத்தேடி அவ்வாறுழலாமல், பேரின்பத்தினைத்தாமும் அந்நிலையிலே யிடையறாது அனுபவிக்குமென்பதாம்.

இதனு லருளோடுகூடிநின்றும் உயிர்கடுன்புறும் இழிபுகூறப்பட்டது. (ச)

அருளறிவிப்பதை யறியாததெப்படியென்னில்?

அறுகு துணையறியா வாற்றேனி லைந்து
முணர்வை யுணரா வுயிர்.

எ-து. அணுகு துணையறியா வாற்றேனிலைந்தும் - ஆன்மாவிடத்திலே பொருந்தியிருக்கிற பஞ்சேந்திரியங்களான்மாவினாலே

காரியப்பட்டுவருகையிலேயும் ஆன்மாவினாலே காரியப்படுகிறோமென்றறியாத முறைமைபோல, உணர்வை யுணராவுயிர்-உயிரிந்தஆன்மாவுந் திருவருளினாலே காரியப்படச்சேயுந் திருவருளினாலேகாரியப்படுகிறோமென்றறியாத வுண்மையுமத்தன்மைத்து

நி-வ-உ. தனக்குமருங்காக வுடன்வருந் துணையினைத்துணையெனநாடாது வழிச்செல்வான்போலவும், தமக்குமுதலாய்நின்று உணர்த்துந்தன்மையறியாத இந்திரியங்கள்போலவும், உயிர்கள் தாமுந் தமக்குயிராய்நின்றுணர்த்தும்அருளினை அறியமாட்டா.

இவை துணைமையுந் தலைமையும் பற்றிவந்த எடுத்துக்காட்டுவமை. (௭)

அருணடத்துவிப்பதனை யறியாத தெப்படி யென்னில்?

தரையை யறியாது தாமேதிரிவார்
புரையை யுணரா புவி.

எ-து. தரையையறியாது தாமேதிரிவார்புரையை-பூமியினிடத்திலே யிருக்கப்பட்ட வான்மாக்கள் பூமிதாரகமாக நடக்கச்சேயும் பூமிதாரகத்தைமறந்து நானடந்தேனென்னு மதுபோல; உணராபுவி-பூமியினிடத்திலேயிருக்கப்பட்ட வான்மாக்களுக்குந் திருவருளினாலே தொழிற்படச்சேயுந் திருவருளினாலே தொழிற்படுகிறோமென்றறியாத முறைமையுமித்தன்மைத்து.

நி-வ-உ. பூமியைத்தமக்கு ஆதாரமென்றறியச் செய்யாது தாமேதமக்காதாரமாகப் போக்குவரவுசெய்வானைப்போல், அருளினைத் தமக்காதாரமென்று அறியாஉயிர்களும்.

புவியென்ப திண்டுயிர்கண்மே னின்றது. (அ)

அருளைத் தேடியறிவாரேனென்னில்?

மலைகெடுத்தோர் மண்கெடுத்தோர் வான் கெடுத்தோர் ஞானம், தலைகெடுத்தோர் தற்கேடர்தாம்.

எ-து. மலைகெடுத்தோர்-மலைமேலிருந்து மலையைத்தேடின வர்போலவும்,—மண்கெடுத்தோர் - பூமியிலேயிருந்து பூமியைத் தேடினவர் போலவும்,—வான்கெடுத்தோர் - ஆகாயத்துக்குள் ளேயிருந்து ஆகாயத்தைத் தேடினவர்போலவும்,—ஞானம் தலை கெடுத்தோர்-ஞானமாகிய வறிவைக்கெடுத்துத் தேடுவார்கள்,— தற்கேடர்தாம்-தம்மைத் தெரியாதவான்மாக்கள்.

நி-வ-உ. மலையினையிழந்தோரும், மண்ணினையிழந்தோரும், ஆகாயத்தினையிழந்தோரும், எங்கணுநிறைந்த பேரறிவினையிழந் தோரும், தானென்பதனை யிழந்தோரும், தம்மிற்று மொப்பர்.

மலை நிலம் ஆகாயம் தான் என்பனவற்றைக் கெடுத்தோர் உலகின் கணில்லை-உள்ளாராயின் அவர்போல அருளினை யிழந் தோரும் பேதையரென்பதாம்.

ஈண்டுத்தற்கேடரென்பது யாக்கைமேல்நின்றது. (எ)

ஞானத்தை யிழந்து திரிவ தேதென்னில்?

வெள்ளத்து ளாவற்றி யெங்கும்விடிந்திருளாம்
கள்ளத் திறைவர் கடன்.

எ-து. வெள்ளத்துணாவற்றி-கழுத்தளவு தண்ணீரிலே போ கிறவன் ஒருவிடயத்திலே யதிதப்பட்டுப்போகிறதுபோலவும்,— எங்கும்விடிந்திருளாம்-ஆதித்தனெங்கும்பிரகாசிக்கச்செய்தேயும் பிறவிக்குருடனுக்கு மிகுந்த விருளாயிருந்தது போலவும்,—கள் ளத்திறைவர்கடன்-கவட்டிந்திரியங்களுக்கு முறைமையாயிருக் கிறவான்மாக்கண் முறைமையு மித்தன்மைத்து.

நி-வ-உ. நிறைந்த நறுநீரின்கண்ணேநின்றும் அதனைப்பரு காது நாவறண்டும், எவ்விடத்தும் இருள்நீங்கி விடிந்திருக்கமயங் கியுநிற்கு மடவோரது தன்மையே, தாம்நிறைந்தஅருளோடுகல ந்துநின்றும் அதனால்வரும் பேரின்பத்தை நுகராத வஞ்சத்தலை மையுடைய ஆன்மாக்களது முறைமை,

உயிர்கண்மாட் டுளதாய குறையேயன்றி அருளின் குறை யன்றென்பதாம்.

வஞ்சத்தலைமையாவது, தாமொன்றிற்குங் கருத்தா வல்ல வாயிருக்கவும் யானெனதென் றகங்கரித்தல். (அ)

அஞ்ஞானநீங்கி யறிவ தெவ்வாறெனில்?

பரப்பமைந்த கேண்மினிது பாற்கலன்மேற்பூஞை
கரப்பருந்த நாடுங் கடன்.

எ-து. பரப்பமைந்த கேண்மினிது-அருட்பொருளைக்கேட் குமிடத்துக் கரணவியாத்திகளைவிட்டு இன்பமாகக் கேண்மின். அப்படிக் கேளாமலிந்திரியங்களின் வழியிலேதிரிந்தாற் கேட்ட பொருளும்பலியாது, சநநமரணமுநீங்காது, அதென்போலவெ ன்னில்,—பாற்கலன்மேற் பூஞை - பாற்சட்டியின்மே லிருக்கிற பூஞையானது பாலைக்குடித்துப் பசிதீராமல்,—கரப்பருந்தநா டுங்கடன்-கரப்பைத்தின்ன விறப்பைநாடுமுறைமைபோல.

நி-வ-உ. சஞ்சலமனத்தாற்படும் விராவினையடக்கிஅருளி ன்றன்மையே யினிதாகக்கேட்டு மனங்கொள்வீராக. அதனைநா டாது சிற்றின்பங்கள் மேற்படரும் இப்புல்லறிவாண்மை, உறி யின்மேல்வைக்கும் இனிய பாற்குடத்தின் மீதிருக்கும் பூஞையா னது, சுவர்த்தலையிலோடுங் கரப்பினைத் தாவிப்பற்றி நுகரவிசா ரிக்கு முறைமையினை யொக்குமாகலான்.

பூஞையும் உறியின்சட் பாற்குடத்தின்மே லிருந்தவாறே அதனைப்பருகாதே கரப்பினைப்பற்ற விசைகொண்டுவாவுங்கால் அது கைப்படின், சிறிதின்மையில்லாத வுணவாதலே யன்றித் தாவலான் மிக்கவருத்தமுமெய்தும். கைப்படாக்கால், வருத்தத் தோடு கரப்பினையும்போக்கிப் பாற்குடத்தினையுமுடைத்துமிக்க துன்பமெய்தும். உயிர்களும்அனுதியே கூடிநின்ற அருளகத்தட ங்கிப் பேரின்பத்தினை யெய்தாது சிற்றின்பங்கண்மேற் படரு

மாயின், அதுபோல வொருகாலெய்துஞ் சிற்றின்பத்துக்கு மன மொழி மெய்களாற் றுன்பமுற்றும், அஃதெய்தாக்கால் இருமை யின்பமு மிழந்தும், மிக்க இடர்ப்படுமென்பதாம்.

உறியின்மேல்வைகும்பாற்குடமெனவும், சுவர்த்தலையிலோ டுங் கரப்பெனவும், விதித்த தநுபவம்.

இவை யைந்துபாட்டானும், அருள்துணையும் இறைமையு மாகியும் ஆதாரமாகியும் நிற்றலை யறியாதிருத்தலும், எவ்விடத் தும் இருப்பதனைக்காணாது மயங்கலும், அதனால்வரு மின்பமெ ய்தாமையும், அதன்மேற் பற்றுச்செய்யாமையுமான உயிரின்குற் றங் கூறப்பட்டன. (௬)

அமையாதார்க் கறியப்படாதோவென்னில்?

இற்றவனா யிசைந்து மேதும் பழக்கமில்லா
வெற்றுயிர்க்கு வீடு மிகை.

எ–து. இற்றவனா யிசைந்தும் சிவனுள்ளகாலந் தொடங்கி யான்மா திருவடியைப் பெறுமளவும், திருவருளுபகரித்துவரச் சேயுந் திருவருளுடனே,—ஏதும் பழக்கமில்லா - சற்று முறவில் லாத,—வெற்றுயிர்க்கு - அளவில்லாதவான்மாக்களுக்கு,—வீடுமி கை-மோக்ஷமொன்றுமே கிட்டாது. இருவினையொப்பு வந்தல்ல துஞானம் பிரவேசியாதென்பது கருத்து.

நி-வ-உ. அநாதியேதொடங்கி இன்றளவும் அருளோடிரண் டறக்கலந்துநின்றும், சிறிதும் அதிற்றோய்ந்த பழமைதோற்றுத லில்லாத வெறியவுயிர்கட்கு வீடுசேர்தலென்பதுமிகுதி. தகாதெ ன்பதாம்.

வெறுமை, பயன்கொளாமை. பழமை தோற்றுதல், உலக வெறுப்புத் தோன்றுதல்.

இதனு லருளோடு கலந்துநின்றும் வீடுகூட நினையாத வுயிரி னைப் பழித்துக்கூறப்பட்டது. (௭)

அருளதுநிலை முற்றிற்று.

ரு-வது திருவுருநிலை.

அஃதாவது, ஞானவடிவாகிய குரவனதுதன்மை. அருளதி நிலைகூறி, அருளாளும் வடிவினது நிலைகூறுதலின், மேலையதிகாரத்தினோடு இதற்கியைபுடைத் தெனக்கொள்க.

இருவினையொப்பி லெவர்வருவா ரென்னில்?

அறியாமை யுண்ணின் றளித்ததே காணுங்
குறியாகி நீங்காத கோ.

எ-து. அறியாமையுண்ணின் றளித்ததே-அறியாமையாகிய பெத்தகாலத்திலே, அறிவுக்கறிவாய்நின்று இரட்சித்த திருவடிதானே,—காணுங்குறியாகி-கரசரணாதிகளுடனே குருவாயெழுந்தருளிவந்தது. ஆனாலுள்ளேயில்லையோவென்னில்? நீங்காதகோ-உள்ளும்புறம்பும் விட்டுநீங்காத ஞானாசாரியாகிய குரு.

நி-வ-உ. தோன்றாத்துணையாய்க்கலந்து நின்று காத்து நடாத்தின அருளே, கண்ணாற் காணப்படும் வடிவினை யுடையதாக விட்டு நீங்காதகுரிசில்.

இதனால் அருள்குருவடிவுகொண்டுவந்தமைகூறப்பட்டது.

அவரோ குருவாகவரவேணுமோ, படித்திருக்கிற வித்துவான்களாகாதோ வென்னில்?

அகத்துறுநோய்க் குள்ளினா ரன்றி யதனைச்
சகத்தருவங் காண்பரோ தான்.

எ-து. அகத்துறுநோய்க் குள்ளினரன்றி - ஒருவனுக்கந்தரமானவிடத்திலே வந்தவியாதியை அவனுக் கந்தரங்கமானபேரறிந்துநிற்பது,—அதனைச் சகத்தவருங் காண்பாரோதான்-அந்தவாணவமலமாகிய வியாதியைச் சகத்திலேயுள்ள காரியம்போலக் குருவாலே நீங்கப்போகாது; சிவனே யாசாரியமூர்த்தமாயெழுந்தருளிவந்து நீக்கினால் நீங்குமல்லது.

கி-வ-உ. ஓர்இல்லின்கண் ஒருவர்கொண்டபிணியை அவ்வி ல்லின்கண் வாழ்வார் அறிவதன்றி, அதனைச் சேய்மைக்கண்ண ராகிய உலகத்தார் அறிய வல்லரோதாம்.

தான்என்பது அசைநிலை. ஓகாரம் எதிர்மறை.

இதனால் இங்ஙனம் வடிவுகோடற்கு அருளாதல் வேண்டு மோவென்னில் ஐயத்தினை யகற்றி வலியுறுத்தப்பட்டது. (௨)

இப்படிவரப்பட்ட ஞானசாரியனை யெல்லாராலு மறியலா மோவென்னில்?

அருளா வகையா லருள்புரிய வந்த
பொருளா யறிவார் புவி.

எ-து. அருளாலகையா லருள்புரியவந்த-அருட்பிரகாசியாத முறைமையினாலே யருளைக் கொடுக்கவந்த,—பொருளாரறிவார் புவி-இப்படிக்கொத்த ஞானசாரியனைப் பூமியிலுள்ளவான்மாக்க ளறியமாட்டார்கள்.

கி-வ-உ. படைப்பு நிலை ஈறு மறைப்பு என்னும் நான்கினை யுந் தோன்றாதுசெய்தவாறுபோல, அருளென்னுந் தொழிலினை யுந் தான் பண்ணாததுபோலப் பண்ணும்படி, மானுடவடிவென் னும்அங்கியால் மறைத்துக்கொடுவந்த உண்மைப்பொருளேஇக் குருவடி வென்பதனை அறியமாட்டாதுஉலகு.

தம்போலொரு மானிடமாக நினைக்குமென்பதாம். (௩)

உத்தமரல்லாதா ரறியப்படாததெந்தவேதுவினாலென்னில்?

பொய்யி ருண்ட சிந்தைப் பொறியிலார் போதமா
மெய்யிரண்டுங் காணார் மிக.

எ-து. பொய்யிருண்டசிந்தைப் பொறியிலார்-அஞ்ஞானமி குதியாலே பொருந்தப்பட்ட சித்தத்தையுடையவர்கள் பஞ்சேந் திரியங்களிலே திரியப்பட்ட வான்மாக்கள்,—போதமா மெய்யி

ரண்டுங் காணார்மிக-அறிவுக்கறிவாயிருக்கிற திருவருளையும், அந்தத் திருவருடானே திருமேனியாய்வந்தவாசாரியனையும், ஆகவிரண்டுவிதத்தையு மிகுதியுற் றறியமாட்டார்கள்.

நி-வ-உ. நிலையாத காய வாழ்க்கையினையும், ஆணவமலத்தால் மறைந்தவுணர்வினையும் உடையராய், ஞானமென்னுஞ் செல்வத்தினையும் எய்துதலில்லாதார், அறிவுமயமாகிய அருளும், அவ்வருளான் ஆகியதேசிகவடிவும் என்னு முண்மைப்பொருளிரண்டினையும் சிறிதுமறியமாட்டார்.

இத்தன்மையவாகிய ஆசாரியவடிவினை, அருள்கொண்டவடிவமாக வுணராராகவே; நின்மலமாய், அகண்டமாய், சின்மயமாய், ஒழிவறநிறைந்த அவ்வருளினையும் உணரமாட்டாரென்பது கருத்து. (௪)

அவர் திருமேனியை யென்போல வறியவேணுமோ வென்னில்?

பார்வையென மாக்களைப் பற்றிப் பிடித்ததற்காம்
போர்வையெனக் காணார் புவி.

எ-து. பார்வையெனமாக்களை-மானைக்காட்டி மானைப்பிடிப்பவர்போல வான்மாக்களை,—பற்றிப் பிடித்ததற்காம்-அவர்சத்திபொருத்திப் பிடிப்பட்டவற்காம்,—போர்வையெனக் காணார் புவி-இப்படி நம்மையிரக்ஷிக்க நமக்காகவந்த திருமேனியென்று பூமியிலுள்ள வான்மாக்கள் அறியமாட்டார்கள்.

நி-வ-உ. விலங்குகள் பறவைகளைப் பிடித்தற்கு அவ்வவற்றின் வடிவாற்செய்த திவகம்போல, மிக்கதொரு வடிவங்கண்டு அஞ்சிவெருளாது. மனிதரைத் தன்வயத்தாக்கிக் கோடற்பொருட்டு, அருள்போர்த்துக்கொண்ட மானுடவுருவாகிய குருவடிவினைப் போர்வையாக அறியமாட்டாவாம் இவ்வுலகு.

இவை மூன்றுபாட்டானும் அகளமாய் நிறைந்த அருளே குருவுருவுதரித்துவந்ததென்பதனை அறியாதார் இழிபு கூறப்பட்டது. (ரு)

போர்வையாக வெல்லாரையும் தற்சொரூபமாக்க வொண்ணுதோவென்னில்?

எமக்கெ னெவனுங் கெவைதெரியு மவ்வத்
தமக்கவனை வேண்டத் தவிர்.

எ-து- எமக்கென்-போகாது.—எவனுக் கெவை தெரியும்- பக்குவமல்லாத வான்மாக்களுக்கு எத்தனைப் புசித்தாலுந் தெரியாது,—அவ்வத்தமக்கவனை வேண்ட-பக்குவப்பட்ட வான்மாக்களந்தவாசாரியனை வழிபட்டுக்கேட்க,—தவிர் - அப்போது மலமாயாதி கன்மங்கணீங்கும்,

நி-வ-உ. நீ குருவுண்மை கொண்டமையால் எமக்கு வரும் பயனென்னை? யாவ னொருவனுக்கு யாவை சிலநூற்பொருள்கள் குரவனையின்றி யுணர முன்னேடு பின்மலைவறத்தோன்றும்,அந் நூற்பொருள்கள் அவனைத் தமக்குக் குரவனுக அவாவிநிற்கும் பொழுது இம்மறுதலையினை ஒழிவாயாக.

குருவுண்மை கொள்ளாயாயின் என்பதெஃகிநின்றது,

இதனல் யாதொரு நூற்பொருள்களுங் குரவனையின்றியுணரப்படாவென்று கூறப்பட்டது. (௬)

திருவரு ளறிவுக்கறிவாயிருக்கிறது போதாதோகுருவாய்வர வேணுமோவென்னில்?

விடநகுல மேவினுமெய்ப் பாவகனின் மீளுங்
கடனிலிருள் போவதெவன் கண்.

எ-து. விடம்-ஒருவனை விடந்திண்டித் தலைமண்டைக்கொண்டு கிடக்கச்செய்தே,—நகுல மேவினும் - கீரியைக் கொண்டு

வந்து கழுத்திலேகட்டினாலும் விட்டுநீங்காது. பின்னை நீங்குகிற தெப்படியென்னில்?—மெய்ப்பாவகனின் மீளும்-உண்மையாகிய பிடாரகன்வந்து தன்னையுங் கிரியாகப்பாவித்து அவன்கிரியாகப் பாவிக்கவே விட்டுநீங்கும்;—கடன்-இந்த முறைமைபோல வாசாரியனுஞ் சிவசொரூபமாயிருந்து சீடனையுஞ் சிவசொரூபமாக ஞானக்கண்ணினாலே பார்க்கவே.—இருள்போவ தெவன்கண்-அந்தகாரமலமாயாதிகன்மங்கணீங்கும்,பின்னையாராலேநீங்கும்.

நி-வ-உ. விடமானது கிரி தானேவந்து தீண்டினு மீளாது, அதன்வடிவினைப் பாவிப்பா னொருவனால் மீளுமாறு போலவே, இவனுடைய திருநோக்கினால் ஆணவவிருள்நீங்கு முணக்கு.

இறைவன் அனாதியோ உயிரோடுகலந்துநிற்பினும் குருவுருக்கொடு வந்தல்லது பாசம் நீங்காதென்பதாயிற்று. இது சகலரைக்குறித்து நின்றது.

இதனால் ஆசாரியனால் பாசம்நீங்கவேண்டுமென்பது கூறப்பட்டது. (எ)

இவர் குருமூர்த்தமா யெழுந்தருளிவந்து இரட்சிப்பது ஒருவகைக்கோவென்னில்?

அகலத் தருமருளை யாக்கும் வினைநீக்குஞ்
சகலர்க்கு வந்தருளுந் தான்.

எ-து அகலத்தருமருளை யாக்கும்-விஞ்ஞானகலரிற் பக்குவர்க்கு அறிவிலே ஞானத்தை யுதிப்பிப்பன், ஆணவமலத்தை நீங்குவன்,—வினைநீக்கும்-பிரளயாகலரிற் பக்குவர்க்குஅவர்களைப்போல மானும் மழுவுஞ் சதுர்ப்புயமுங் காளகண்டமு மூன்று நேத்திரமுமாக எழுந்தருளிவந்து ஆணவமலத்தை நீக்கிச்சிவஞானத்தைப் பிரகாசிப்பிப்பன்,—சகலர்க்கு வந்தருளுந்தான்-சகலரிற்பக்குவர்க்கு அறுவகைத் திட்சையினாலேயு மும்மலத்தையு நீக்கிக்கிரமத்திலே சிவஞானத்தைப் பிரகாசிப்பிப்பன் கத்தா.

நி-வ-உ. கலையினின்றும்நீங்கின விஞ்ஞானகலர்க்கும்பிரளயாகலர்க்கும் நிராதாரமாய்நின்று அருளைவிளக்கும். கன்மமலச்சேதனம்பண்ணுதற்குப் பக்குவராகிய சகலர்க்கும்குருவுருவினையாதாரமாகக் கொண்டவர்போலத் தானேவந் தனுக்கிரகம்பண்ணும். அவ்வா றருள்புரிதல் சகலர்க்குங்கூடாதென்பதாம்.

பிரளயாகலர்க்குக் கலைநீங்கலாவது, அதன்வயத்தாகாதிருத்தல். குவ்வுருபு விகாரத்தால்தொக்கது. முதலிருவர்க்கு "நிராதாரமாகிக் கரையிலருட்பரந்துவிதா சத்திநிபாதத்தால்" என்றருளிச்செய்தவாறு காண்க.

இதனால் அருள் மானிடச்சட்டை சாத்திவருதற்குக் காரணங்கூறப்பட்டது. (அ)

குரு வாராம லாகாதோவென்னில்?

ஆறிவா ரெல்லா மகன்ற நெறியருளும்
பேரறிவான் வாராத பின்.

எ-து. ஆறிவார்-ஆறிந்து மோக்ஷமடையப்போகிறார்,—எல்லாமகன்ற நெறியருளும்-முப்பத்தாறு கருவிகளும் நீங்கும்படிபண்ணிச் சாயுச்சியமான வீட்டைக்கொடுக்கப்பண்ணின,—பேரறிவான் வாராதபின் - மகத்தாகிய சிவஞானத்தை யுடைய சிவன் வாராதபோது.

நி-வ-உ. மந்திரமுதல் கலையீறாகிய மூவிரண்டு அத்துவாவுங்கடந்த வீட்டுநெறியினை வெளிப்படுத்தும் நிறைந்த ஞானத்தினையுடைய இறைவனே, குருவுருக்கொண்டு வாராதவிடத்து, அதனை அறியவல்லார்யார். ஒருவருமில்லையென்பதாம்.

இதனால்நிறைந்த அறிவனாகிய இறைவனே உருக்கொடுவரினல்லது உண்மையையுணர்தல்கூடாதென்பதுகூறப்பட்டது.

இவர்வேறுமுத்தராக வரவேணுமோ என்னறிவிலே யிருக்கிறது போதாதோ வென்னில்?

ஞான மிவனொழிய நண்ணிடுநற்கலநற்
பானு வொழியப் படின்,

எ-து. ஞானமிவனொழிய நண்ணிடும்-இவன் ஞானசாரியனாக வாராமல் ஞானம்பிரகாசிக்கும்,—நற்கல நற்பானுவொழியப்படின்-நல்ல சூரியகாந்தக் கல்லினிடத்திலே யாதித்தனில்லாம லக்கினியுண்டாகின்.

இவ்விரண்டு மப்படியாகா தென்பதுகருத்து.

வி-வ-உ. அருள்வடிவாகிய குரவனை யன்றி யொருவற்கு ஞானமுண்டாதல் கூடும். ஆதித்தனலன்றி மாசிலாச் சூரியகாந்தக்கல்லினிடத்து நெருப்புத் தோன்றுமாயின். இரண்டு மில்லை யென்பதாம்.

இதனல் திருவடிஞானம் குரவனையின்றியமையாச் சிறப்பிற்றென மேலதுவலியுறுத்தப்பட்டது. (௰)

அருளுருநிலை முற்றிற்று.

௬-வது அறியுநெறி.

அஃதாவது, உண்மைப்பொருளையுணரு முறைமை. அருளுருநிலைகூறி அதனலறியும்பொருளுண்மைகூறுதலின். மேலையதிகாரத்தினேடு இதற்கியை புண்மையறிக.

அவனெப்போது குருவாவானென்னில்?

நீடு மிருவினைக ணேராக நேராதல்
கூடுமிறைசத்தி கொளல்.

எ-து. நீடு மிருவினைகள்-மிகுத்த புண்ணியபாவங்களிரண்டும்.—நேராக நேராதல்-துலையொத்தவிடத்து,—கூடுமிறை சத்திகொளல்-கத்தா திருமேனிகொள்வர், அப்போ சத்திபதியும்,

நி-வ-உ. ஒன்றையொன்றொவ்வாது மிக்குவளர்ந்து வரும் புண்ணியபாவங்க ளிரண்டும் தம்மி லொப்பாக வரும் பருவத்தி லேயுண்டாகும், சிவனுடைய சத்திபதிதல்.

நேராக நேராதல், ஓர்புண்ணியத்துக்கோர்பாவமோர்வகை யானொத்திருத்தலாம். அதுவன்றி வாக்கு மனங் காயமென்னு மூவகையா லியற்றப்பட்ட புண்ணியங்கள்முழுவது மோர் பங் கும், பாவங்கள்முழுவது மோர்பங்குமாகப், பொன்னும் இரும் பும் கன்மத்தாற்றுலையொக்கத்தூங்குதல்போலப், பலத்தாற்சமனு தல், சத்தி பதிதலாவது, நிலையாதவியல்பினை யுடையவுலகநடை யினையஞ்சி வீட்டுநெறியினை விரும்பும்வண்ணம் உயிர்கள துண ர்வினைத் திருந்தச்செய்தல். ஒன்றையொன்றேற்றத்தாழ்வுபடில் அவையவை யிகல்செய்திழுக்குமென்பதாம்.

இதனானுண்மை வுணர்தற்கேதுவான சத்திபதியு மெல்லை கூறப்பட்டது. (க)

கத்தா திருமேனிகொண்டுவந் தென்னத்தை யறிவிப்பா ரெனில்?

> ஏக னனேக னிருள்கரும மாயையிரண்
> டாகவிவை யாறு மநாதி.

எ-து. ஏகன்-கத்தாவும்,—அநேகன்-ஆன்மாவும்,—இருள் ஆணவமலமும்,—கருமம்-கன்மமலமும்,—மாயையிரண்டு-சுத்த மாயை யசுத்த மாயையும்,—ஆகவிவை - ஆகவிந்த வாறுபொரு ளும்,—அநாதியில்-அநாதியிலே யுண்டானதென் றறிவித்தார்.

நி-வ-உ. ஒருவனாகிய இறைவனும், அளவில்லாகிய வுயிர்க ளும்; இருள்வடிவாகிய ஆணவமலமும், கன்மமலமும், சுத்த மசு த்தமென்னு மிருவகை மாயைகளுமாகிய இப்பொருள்கள்ஆறும் அநாதியாகிய பொருள்கள்.

அனேகன் என்பதில் ஈற்றுமகரம் னகரமாய்த்திரிந்து நின்றது. இவையாறுமென அக்றிணை வாசகங்கொண்டு மிகவினால் முடிந்த திணைவழுவமைதி. ஆறுமென்னு முற்றும்மை செய்யுள் விகாரத்தாற் றொக்கது.

இதனால் நித்தியப்பொருள்க ளிவையெனத் தொகுத்துக்கூறப்பட்டன. (உ)

அனாதியாகி லாறுபொருளினு மறிவ தேதெனில்?

செய்வா னுஞ்செய்வினையுஞ் சேர்பயனுஞ்சேர்ப்பவனு
முய்வா னுளனென் றுணர்.

எ-து. செய்வானும்-கன்மத்தைச் செய்யப்பட்ட வான்மாவும்,—செய்வினையும் - செய்யப்பட்ட புண்ணியபாவமும்,—சேர்பயனும்-புண்ணியபாவத்துக் கேதுவாகிய சுகதுக்கமும்,—சேர்ப்பவனும்-இந்தக் கன்மத்தைக்கூட்டிப் புசிப்பிக்கப்பட்ட கத்தாவும்,—உய்வானுளனென்றுணர்-இஃதெல்லாமறிந்து பிழைக்கிறவனுன்மா.

நி-வ-உ. புண்ணிய பாவங்களைப் பண்ணும்புருடனும்,அவனாற் செய்யப்படும் வினைகளும், அவற்றின்பயனாகியஇன்பதுன்பங்களும், அவற்றைக் கூட்டியருத்துமிறைவனு மென்னு மிந்நான்குதிறத்தினையுடையனாகவுன்னையறிவாயாக. மாணவகனே! நீகதிசேர்தற்பொருட்டு.

இவை யுணராதிருக்கவே யா னெனதென்னுஞ் செருக்கனாகி பிறவித்துன்ப முறுமென்பதாம். உடையனாதல் இருவினைகளைச்செய் திறைவனா லவற்றின்பயனை நுகர்தற்குத் தானுரியனாதல். (ங)

உய்வான் றனையறிவனோ வென்னில்?

ஊனுயிரால் வாழு மொருமைத்தே யூனொடுவேர்
தா னுணர்வோ டொன்றாந் தரம்.

எ-து. ஊனுயிரால்வாழு மொருமைத்தே-சரீரமானதுஆன் மாவினலே யொருபடித்தாய் சீவிக்கிற முறைமைபோல்,—ஊ னுடயிர் - இந்தச் சரீரத்தேயிருக்கிற வான்மாவும்,—தானுணர் வோடொன்ருந்தரம்-இந்தத் திருவருளினலே சீவித்து நிற்கிற துமித்தன்மைத்து.

ஙி-வ-உ. உடம்பானது உயிரோடுகூடிப்பிரிப்பின்றிரடை பெறு மொற்றுமையினை யுடைத்து. அவ்வுடம்போடுயிர்கணிறை ந்தஞானத்தோடுகூடி யொன்றுபட்டு வேறறநிலைபெறுந் தகுதி யன. உடலகத்துயிர்போலக் கலந்துநின்றுநடத்துமென்பதாம்.

உடம்பென்ற பொதுவகையால் ஐவகையுடம்பு மடங்கும் அவையடங்கவே நிலமுதல் நாதமீருகிய தத்துவமெல்லா மடங் குமெனக்கொள்க. (சு)

அருளாற் காரியப்படுத லெப்படியென்னில்?

தன்னிறமும் பன்னிறமுந் தானுங்கற் றன்மைதரும்
பொன்னிறம்போன் மன்னிறமிப் பூ.

எ-து. தன்னிறமும்-படிகந் தன்னுடையபிரகாசத்தையும், —பன்னிறமும்-பஞ்ச வன்னங்களினுடைய விளக்கத்தையும், —தானுங்கற் றன்மைதரும்பொன்னிறம்போல்-இவ்விரண்டை யங் கூட்டிக் காரியப்படுத்தப்பட்ட வாதித்தப் பிரகாசத்தைப் போல்,—மன்னிறமிப்பூ-கத்தாவினுடைய திருவருளுஞ் சித்துக் கறிவும் சடத்துப்பிரேரகமாயிருக்கிறது மித்தன்மைத்து.

ஙி-வ-உ. அடுத்த பலவன்னங்களையுங் கவர்தலும், அவைய டுத்திருக்கினுந் தன்னிறமேகாட்டி நிற்றலுமாகிய படிகத்தினது தன்மை யிரண்டிற்கும் தான் காரணமாகின்று பண்ணுஞ்சூரி யன்கிரணம்போலாம், இவ்வுலகிற்கு இறைவனது சுடராகிய ஞா னசத்தி.

கட்டுவீடென்னு மிரண்டிற்குந் தானென்றே காரணமெ ன்பதாம்.

இவை மூன்றுபாட்டானும் இறைவனுலகினை நடத்துமாறு கூறப்பட்டது. (௫)

அருளால்காணவேண்டுவதில்லை நானேகாண்பனென்னில்?

கண்டொல்லைகாணுநெறிகண்ணுயிர்நாப்பணொளி
யுண்டில்லை யல்லா தொளி,

எ-து. கண் டொல்லை காணுநெறி-சீக்கிரமதிலே காணப்பட்டது,—கண்-கண்ணுவு மொளிவிளக்கானது கண்ணுக்கும்பதார்த்தத்திக்கு நடுவே பிரகாசித்தாற் கண்ணனதுபதார்த்தத்தைக் காணும்,—உயிர் நாப்பணொளியுண்டு-ஆன்மாவுக்கு ஞேயத்துக்கு நடுவே ரருள்பிரகாசித்தா லான்மாஞேயத்தைப்பெறுகிறதுண்டு,—இல்லையல்லாதொளி-ஒளியாகியதிருவருள்பிரகாசியாதபோது ஞேயமே விளங்காது.

நி-வ-உ. நினைவினையுடைய வுயிரினது நடுவாகஞானவொளிக்கு நிலையுண்டாதல் வேண்டுமென்றுயின் வாயில்வழியாற் புலன்களை யுற்றுப்பார்த்து விஷாவிலுணருமுறைமையில்லை.

நடுவாகநிற்றல் கலந்துநிற்றல். இதனுல் ஞான முன்னிற்பினல்லது அறிதல் கூடாதென்பதோ ரநுபவவகையால்விளங்கக் கூறப்பட்டது.

இது சூரவண ல்ன்றி யுஷாகொண் டுணர்த லரிதெனக் கொள்க. (௬)

அரனருளாற் காணுஞ்செய லென்போல வென்னில்?

புன்செயலி னோடும் புலன்செயல்போ னின்செய
மன்செயல தாக மதி. [லை

எ-து. புன்செயலினோடும் புலன்செயல்போல்-ஆன்மா பஞ்சேந்திரியங்களினலே யொரு விடயத்தை யறிகிற முறைமை போல,—நின்செயலை-உன்னுடைய செயலையும்,—மன்செயலதா

சமதி-நிலைபெற்ற திருவருளினாலே காரியப்படுகின்றேமென் றறி வாயாக.

நி-வ-உ. புருடனது சிறுதொழிலின்வழியே திரிபின்றி நட க்குமிந்திரியங்களது செயல்போல. மாணவகனே; நின்னுடைய செய்தியையும் இறைவனது கிரியாசத்திவழியே யவ்வாறு நடப்ப தாகக் கருதுவாயாக, அவ்வாறுகருதவே வினைத்தொடர்பின்றிப் பிறவிநீங்கி நிற்பயொன்பதாம்.

இதனு விறைவனது செயல்வழி நிற்றல்கூறப்பட்டது.

அருளாற் செயற்பட்டறிவ தேதென்னில்?

ஓராதே யொன்றையுமுற் றுன்னுதே நீமுந்திப்
பாராதே பார்த்தனைப் பார்.

எ-து ஓராதே-ஒன்றையும் விசாரியாதே கேவலத்திலும், ஒன்றையுமுற் றுன்னுதே-சகலத்திலும் நீ யொன்றையு நினையா திருக்கச் செய்தேயிரு,—நீ முந்திப்பாராதே சுத்தத்திலு நீ யது விதுவென்று சுட்டிப்பாராதே,—பார்த்ததனைப்பார்-இந்த மூன் றவத்தையிலு மதுவதுவாக வருவிக்கப்பட்ட திருவருளையேகா ண்பாயாக.

நி-வ-உ. ஞான மெவ்வண்ண மிருக்குமோவென் றாராயா மல், அதனையும் விடயங்கள்போலக்குறிக்கொண் டேன்றிநினையா மல், நீயாகமுன்சென்று மேற்கொண்டு காண்டலுஞ்செய்யாமல், உன்னைக்கண்ட ஞானத்தினைக் காண்பாயாக.

இவ்வா றசைவின்றி நிற்கவே அவ்வகண்டமாகிய ஞானந் தானே தோன்றுமென்பது கருத்து. (அ)

அப்படித் திருவருளை யெதிரிட்டுப் பார்க்கிலெனக்குச் சந் தோஷம் வருமேயென்னில்?

களியே மிகுபுல னாக்கருதி ஞான
வொளியே யொளியா வொளி.

எ-து. களியே மிகுபுலனுக் கருதி-அந்தச்சந்தோஷமேமிகு த்தவிடயமாக நினைத்து,—ஞானவொளியே யொளியாவொளி-ஞானமாகிய பிரகாசமே மறைவாகவொளித்து நிற்பாயாக.

நி-வ-உ. இத்தன்மையவாகிய ஞானத்தினைக் காணப்பெற் றமையால். வருமகிழ்ச்சியைப் பெரியவிடயமாக நினைந்து ஞா னமாகிய வொளியன்றி வேறுணக்கோரொளியின்றாகும்படி அத னுட் புக்குக்கரந்து நிற்பாயாக.

கரந்துநிற்றல் விகற்பமறக் கூடிநிற்றல்.

என்றுமிவை யிழந்துநிற்கிற தெப்படியென்னில்?

கண்டபடி யேகண்டு காணாமை காணாமை
கொண்டபடி யேகொண் டிரு.

எ-து. கண்டபடியே கண்டு - திருவருளைத் தரிசித்தபடியே தரிசித்து,—காணாமை காணாமை - சகல கேவல நீங்கினபடியே நீங்கி,—கொண்டபடியே கொண்டிரு-திருவருளுன்னைக் கருத்து க்கொண்டபடியேநீயுமசைவற நிற்பாயாக.

நி-வ-உ. ஞானமான் தனக்கு யாதொருபடியே வெளிப்ப ட்டது, அப்படியே நீயும் கண் டறியாமையாகிய அதீதாவத்தை வந்துதோன்றாமல், யாதொருபடி யுன்னை விழுங்கிற் றப்படியே நீயும் விழுங்கக்கொடுத்திருப்பாயாக.

இம்மூன்றுபாட்டானு ஞானத்தினைக்காணுமாறும், கண்டா லதனுட்கலக்குமாறும், அவ்வழித் தன்னை அதன்வயத்தனுக்குமா றும்கூறப்பட்டன. மாணவகனேயென்ப திம்மூன்றிற்குங் கூட் டியுரைக்கப்பட்டது. (ல)

அறியுநெறி முற்றிற்று.

எ-வது உயிர்விளக்கம்.

அஃதாவது ஆன்மசுத்திபண்ணும்படி அறியுநெறியிற் கூறியவாற்முன் அறிந்தபடி நின்று யானெனதென்னுஞ் செருக்கறுத்தல் கூறினமையின், மேலைபதிகாரத்திேனே டிதற்கியைபுடைத்தெனக்கொள்க.

கொண்டபடி கொள்வ தெக்காலமென்னில்?

தூநிழலார் தற்காருஞ் சொல்லார் தொகுமிதுபோற்
ருனதுவாய் நிற்குந் தரம்.

எ-து. தூநிழலார் தற்காருஞ்சொல்லார் பவுத்திரமாகியதன்னுடையநிழல் ஆதித்தன் மத்தியத்திலேவந்தாற் றனக்குள்ளேயடங்கிநிற்கிறதற்கு யாருஞ் சொல்லவேண்டியதில்லை,—தொகுமிதுபோல்-இந்த முறைமைபோல,—தானதுவாய் நிற்குந் தரம் - இருவினை யொப்புவந்தா லான்மா திருவருடானுய் நிற்கிதற்குமியாருஞ் சொல்லவேண்டுவதில்லை,

நி-வ-உ, கோடையான் வெதும்பினேன் குளிர்ந்த நிழலையடைதற்கு அடைதியென வொருவருஞ் சொல்லார், தானேவிரைவினடையுந் தன்மையினை யொக்கும்; மாயாவிகார வெம்மையான் வருந்தினேனெருவன் தானவ்வருளினை யடைந்ததுவாய் நிற்குமுறைமை,

உலகவெறுப்பினல்லது அருளினையடைதல் கூடாதென்பதாம்.

இதனு லருளினையடைதற்கு ஏதுகூறப்பட்டது, (க)

எல்லார்க்குமொக்க விந்தத் திருவரு ணில்லாத தென்னெனில்?

தித்திக்கும் பாருனுங் கைக்குந் திருந்திநோப்
பித்தத்தின் ருன்றவிர்ந்த பின்.

எ-து. தித்திக்கும் பாலுனுங்கைக்கும்-பித்தமேவிட்டபொழுது தித்திக்கிறபாலுங் கசக்கும்,—திருந்திடு நாப்பித்தத்திற்றன்றவிர்ந்த பின்-திருத்தமாகவறிகிற நாவிலே பித்தநீங்கினபோது கசந்தபாலுந் தித்திக்கும். அதுபோல் வாணவமல மேலீட்டினாலே குருலிங்கசங்கமத்திலே யாசையறப்பண்ணும், அந்த வாணவமலநீங்கினபோது குருலிங்கசங்கமத்திலே விருப்பமுண்டாம்.

நி-வ-உ. குற்றந்தீர்ந்த நாவானது பித்தநோயினின்றும்தான் நீங்கினபின்னர் முன்கைத்தபாலும் தித்திக்கும்அதனைத்தானுங் கண்டறியும்.

மலவிருள் தீர்ந்தபின்னர் முன்னந்திரோபவித்துநின்றமருளும் அருள்வடிவாகி வெளிப்படும், அதனையுயிர்களுங்காணுமென்பதுபொருள். மாசுதீரின்விளங்கித் தோன்றுந் தன்மையினையுடையது உயிரொன்பதற்கு உவமித்து இதனைத்திருந்திடு நாவென்றருளிச்செய்தார். இதுவும் ஒட்டென்னுமலங்காரம்.

இதனு லருள்வெளிப்படுங் காலமும், உயிர் அதனைத் திருந்திக்காணுங்காலமு மொன்றென்பது கூறப்பட்டது. (உ)

அறியாமைநீங்க வறிந்தவ னுனென்னில்?

காண்பா ெனளியிருளிற் காட்டிடவுந் தான்கண்ட
வீண்பாவ மெந்நாள் விழும்.

எ-து. காண்பா னொளியிருளிற் காட்டிடவும்-காணப்பட்டவான்மாவுக்குத் திருவருளான தாணவமலத்தைநீக்கிநேயத்தைக் காட்டச்செய்தேயும்,—தான்கண்ட வீண்பாவ மெந்நாள்விழும்-நான்கண்டேனென்கிற பாவ மெந்தச்சகநத்திலே தள்ளுமோ?

நி-வ-உ. ஒளிவடிவாகிய ஞானம், தன்னைக்கண்டறிதற்பொருட்டு மலவிருளிலே மருண்டுகிடக்கின்ற வுயிர்கட்குத் தன்னை வெளிப்படுத்தவும், அதனைநாடாது உயிர் தானே காண்பதாகக்

கண்டமையாலே வறிதேவரும் பாவமென்னபயனைச் செய்ததாய் வந்துமுற்றும்.

ஓர் புலனுணர்வான் வரும் பாவம்போலாது வாளாவருத லின் வீண்பாவமென் றருளிச்செய்தார்.

பித்தம் பாலானன்றி மற்றொன்றானும் தீராவாறுபோல,மல மும் அருளாலன்றிப் பிறிதொன்றால்தீராதென்பதூஉம், அருள் மறைந்துநில்லாது வெளிப்பட்டுநிற்பினும் அந்நாக்குச் சுவைகா ண்டல்போலத் தானே காண்டல் கூடாதென்பதூஉம், இதனுட் கொண்டுகிடந்தவாறு கண்டுகொள்க.

இதனால் அருளைமுன்கொண்டு காணுக்கால் குற்றமுடைத் தென்பது கூறப்பட்டது. (ரு)

தெளிந்தார் செயலுந் தெளியாதார் செயலு மெப்படியோ வென்னில்?

ஒளியுமிருளு மொருமைத்துப் பன்மை
தெளிவு தெளியார் செயல்.

எ-து. ஒளியுமிருளு மொருமைத்த படலமுடைய கண்ணு க்குஆதித்தப்பிரகாசமும் பூதவிருளு மொருபடித்து,—பன்மை- இந்த முறைமைபோல,—தெளிவு தெளியார்செயல் - மலமாயா கன்ம மேலிட்டபேர்க்குப் பாசமும் பதியுமொரு படித்தாய் விள ங்காநிற்கும்.

நி-வ-உ. பலவாய பொருள்கடம்பன்மை தோன்றாது ஒருப டித்தாயிருத்தல் ஒளியின்கண்ணும் இருளின்கண்ணு மொக்கத் தெளிந்துநிற்றலும் மருண்டுநிற்றலுமாய செயல்கள் அவ்விடத் துப்பேதம்.)

இதனாலருளோடுகூடி நிற்றல் ஒருவகையாலிருளோடுகூடி நிற்றல்போலுமென்பது கூறப்பட்டது. பிறிதொன்றுந் தோன் றாதென்பதுகருத்து. (சு

தெளிந்திருந்துகூடுவ தெல்லார்க்குந்தெரியுமோவென்னில்?

கிடைக்கத் தகுமோநற் கேண்மையார்க் கல்லா
லெடுத்துச் சுமப்பானை யின்று.

எ-து. நற்கேண்மையார்க்கல்லால்-நல்லகேள்வியினையுடை யநாதாக்களுக்கேயல்லாமல்,—எடுத்துச் சுமப்பானை - எல்லாப் பதார்த்தத்தையுஞ் சுமத்தச் சுமக்கிற சிவனை,—இன்று-இப்பொழுது,—கிடைக்கத்தகுமே கிடைக்குமே கிடையாதோபின்னை.

கி-வ-உ. நல்ல கேள்வி யுடையார்க்குத் தம்மேல் பாரமுழுதுஞ் சுமத்தச் சுமக்கு மொருவனை யிப்பொழுதே கிட்டுதல் கூடுமோ.

நற்கேண்மையென் றருளிச்செய்தார் அருளோடு கூடிய தென்பதற்கு.

இதனால் அருளாகுங் கேண்மையினையுடையார்க்குத்தன்னை யடைந்தார் வினைகளெல்லாம் அவரைத்தொடராதுதன்செயலாகக்கொள்ளுஞேயம்வெளிப்படுத லெளிதென்பதுகூறப்பட்டது.

“ சிவனு மிவன்செய்தி யெல்லாமென்செய்தியென்றும் செய்ததெனக் கிவனுக்குச்செய்ததென்றும், பவமகலவுடனாகி நின்று கொள்வன் பரிவார் பாதகத்தைச்செய்திடினும் பணியாக்கிவிடுமே ” என்றருளிச் செய்தவாறு காண்க, (௫)

எடுக்கிறவனொருத்தன் சுமக்கிறவ னொருத்தனோ, எல்லாம் பிரமந்தானே யென்னில்?

வஞ்சமுட னொருவன் வைத்த நிதிகவரத்
துஞ்சினையோ போயினையோ சொல்.

எ-து. வஞ்சமுடனொருவன் - வஞ்சகமாக வொருவன்,— வைத்தநிதிகவர-வைத்ததிரவியத்தை யெடுத்துக்கொள்ள வைத்தவன்வந்துகேட்க வில்லையென்ன,—துஞ்சினையோ போயினை

யோசொல் - தூங்கித்தான் கிடந்தாயோ இவ்விடம்விட்டுத்தான் போனுயோ சொல்? அப்படிப்போலச் சிவன் தனு கரண புவன போகங்களைக் கொடுத்திருக்கவும், கொடுத்தவன்ருனேகுருலிங்க சங்கமமாய்வந்து என்னுடைமையைத் தாவென்று கேட்க, இல்லையென்றுசொல்லிக் கொடுத்தவனை மறைக்கையினுலே நீ பிரமமல்ல அடிமை.

நி-வ-உ. ஒருவன் சேமித்தபொருளினை ஒருவன்காவினுல் கவர்ந்துகொண்டேக, மற்றவனுறங்குதல் செய்தானே, அவ்விடம்விட்டுநீங்குதல்செய்தானே, மாணவகனே?சொல்வாயாக.

அதுபோலக் கேடின்றி நிறம்பிநிற்கு ஞானசத்தியினை வஞ்சித்து அதன் முதலாயஞேயத்தினை யுடைத்தாதல்அரிதென்பது இதனுற் கூறப்பட்டது.

இதுவும், முன்னதுவும் ஒட்டென்னு மலங்காரத்தாற்கூறப்பட்டன. துஞ்சினையோ போயினையோஎன்பதனை துஞ்சினனே போயினனே எனப்பர்டமுரைத்து தூங்குதல்செய்தானே அவ்விடம்விட்டுநீங்குதல் செய்தானேஎன உரைகூறினர் நிரம்ப வழகியர். (௬)

இப்படி யடிமையாகிய ஞானவானிடத்திலே மலங்கள்வாராதோவென்னில்?

தனக்கு நிழலின்று மொளிகவருந் தம்ப
மெனக்கவர நில்லா திருள்.

எ-து. தனக்கு நிழலின்று மொளிகவருந் தம்பமென-ஆதித்தனுச்சியிலே வருகிறபோது படிகத்தம்பமானது பஞ்சவன்னங் கவராமலாதித்தன்ருனாய் நின்றதுபோல,—கவரநில்லாதிருள்- ஆன்மாவுக் கிருவினையொப்பு மலபரிபாகம்வந்த வவதரத்திலருள்பிரகாசிக்கவே பஞ்சமலங்களையும் பொருந்தாம லருளே நிகழநிற்பது மிப்படியேபோல.

நி-வ-உ. தனக்கென வேருெளி தோன்ருதவண்ணம் சூரியகிரணத்தாற் கவர்ந்துகொள்ளும் படிகத் தூண்போல ஆன்மா தன்னுடையபோதந் தோன்ருதுநிற்கும்வண்ணம்அருள்கவர்தலைச் செய்யுமாயின் அந்நிலையே யிருளானதுதன்பால் நிலைபெருது நீங்கும்.

சூரியகிரணத்தினுள்ளே தன்னைக் கொடுத்துநிற்கும்படிகம்போல ஆன்மாவுந் தன்னையருளினுள்ளே கொடுத்து நிற்றல்வேண்டு மென்பதாம்.

இதனுல் ஆன்மாவை அருள் தன்வயத் தாக்குமாறு கூறப்பட்டது.

மலந்தோன்ரும லருளே நிகழநிற்ப தெப்படியென்னில்?

உற்கைதரும் பொற்கை யுடையவர்போ லுண்மைப்பி
னிற்க வருளார் நிலை.

எ-து. உற்கைதரும் பொற்கை யுடையவர்போல்-பொலிவினையுடைய கையிலே விளக்கைப்பிடித்து முன்னிட்டுப் போனவர், நினைத்தபதார்த்தங்களை யெடுப்பார்கள்,—உண்மைப்பினிற்கவருளார்நிலை - ஆன்மாவருளை முன்னிட்டுக்கொண்டு நிற்கவே ஞேயத்தைப் பொருந்துவன்,

நி-வ-உ. தழற்கொள்ளியினைப் பிடித்திருக்கு மழகிய கையினையுடையோர், தாம் வேண்டியபொருள்களைக் காணுமளவும்அதனைமுன்னிட்டுத் தாம் பின்னிற்குமாறுபோல, ஞேயமானதுவெளிப்படுமளவும் அருளைத் தமக்குமுன்ஞக்கித் தாம் அதன்பின்னிற்றலே யருளோடு பொருந்திநிற்கு நிலையாவது.

இதனு லருளோடு பொருந்திநிற்குமுபாயங்கூறப்பட்டது.

அருளேயறியும், யா னறியவேண்டுவதில்லையென்னில்?

ஐம்புலனுற் ருன்கண் டகன்ரு லதுவொழிய
வைம்புலனுர் தாமா ரதற்கு.

எ-து. ஐம்புலனுற்முன்கண்டகன்முலதுவொழிய-ஆன்மாபஞ்சேந்திரியங்களினுலே யொருவிடயத்தை யறிகிறதல்லாமல்,— ஐம்புலனுர் தாமாரதற்கு-இந்திரியங்க ளான்மாவுக்கு விடயங்களை யறிவிக்கிறதல்லாம லிந்திரியங்களுக் கறியவேண்டுவதில்லை, அப்படிப்போல வான்மா திருவருளினுலேநேயத்தைப்பொருந்துகிறதல்லாமல் திருவருளுக் கறியவேண்டுவதில்லை.

நி-வ-உ. மெய் வாய் கண் மூக்குச்செவிகளால் தாம் கண்டறிந்த விடயங்களுள் ஒன்றல்லவாயின், அவ்வருளானே யன்றிப் பேரின்பமாகிய நேயத்தினை யடைதற் கவ்வைம்பொறிகள்தான் ஆர்? உயிர்கள்தாம் ஆர்?

சுட்டிறந்து நின்றமையா லிவர்க் கடைத லுரிமையில்லையென்பார் ஆமொன்றருளிச்செய்தார். (௬)

அருள் காட்டவேண்டுவதில்லை, நானே காண்பனெனில்?

தாமே தருமவரைத் தம்வலியி னுற்கருத
லாமே யிவனு ரதற்கு.

எ-து. தாமேதருமவரை-ஒருத்தன் றயவினுலே கொடுக்கச்செய்தே,—தம்வலியினுற் கருதல்-தம்முடைய வலிமையினுலே பறித்தாற்கொடாது,—ஆமே-அப்படிப்போல,—இவனுரதற்கு-திருவருளானதுதன்னுடையகிருபையினுலேநேயத்தைக்காட்டாமற்க வான்மபோதத்தாலே நேயத்தைப் பொருந்தப்போகாது.

நி-வ-உ. ஒருபொருளினை யொருவற்குத் தாமே கருத்தாக நின்று விரும்பித்தருதற்கு உரியாரைத் தம்வலியால் தந்தவராக் நினைத்தல் முறைமையன்றே, ஆதலால், அவ் வருளாற் பெறும் பேரின்பத்திற்கு அப்பெற்றியினை யடையநிற்கும்இவன்யார்.

இவையிரண்டுபொட்டானும் பேரின்பமாவ தருளாலே யன்றிக் கரணங்களோடுகூடியும் தனித்தும் உயிர்களால் அடையப் படா தென்பது கூறப்பட்டது. (௭)

உயிர்விளக்க முற்றிற்று.

அ-வது இன்புறு நிலை.

அஃதாவது, ஆன்மலாபமடையு முறைமை. ஆன்மசுத்தி கூறிப் பின்னரதனாலெய்தும் பயன்கூறினமையின் மேலையதிகாரத்திேனாடு இதற்கியை புண்மையறிக.

இன்பமடைத லெவ்வாறென்னில்?

இன்புறுவார் துன்புறுவா ரிருளி னெழுஞ்சுடரின்
பின்புகுவார் முன்புகுவார் பின்.

எ-து. இன்புறுவார் - இன்பத்தைப் பொருந்துகிறவர்கள் சிலர்,—துன்புறுவார் - துன்பத்தைப்பொருந்துகிறவர்கள் சிலர்,—இருளினெழுஞ் சுடரின் - அந்தகாரமாகிய விருளிலே விளக்கைப் பிடித்து முன்னிட்டுப் போனவர்கள் நினைத்த பதார்த்தத்தையெடுப்பார்கள். விளக்கைப் பின்னிட்டுப்போனவர்களந்தப் பதார்த்தையெடுக்கமாட்டார்கள். இந்தமுறைமைபோல.—பின்புகுவார் முன்புகுவார்பின்-ஆன்மா வருளை முன்னிட்டுக்கொண்டுநிற்கவே நேயத்தைப் பொருந்துவன். அருளைப் பின்னிட்டு நின்றவர்கள் சநநமரணத்திலே யழுந்துவார்கள்.

நி-வ-உ. முன்னர்ஞானத்தினைப் பின்னிட்டுத் தாமதற்கு முன்செல்வாராகில் துன்புற்றவரோ, பின்னர்மிக்க துன்பினைச் செய்யு மலவிருளிலேநின்று மெழுந்தஞானவிளக்கினை முன்னிட்டுத் தாமதன்பின்செல்வாராகில் பேரின்பத்தினையடைவார்.

துன்பவின்பமடைதற்குக் காரணஞானத்திற்கு முன்பின் சேறலாயிற்று. கட்டுற்று நின்றவர்க்கும் வீடடைபவர்க்குந் தம்முள் வேற்றுமை யிதுவென்பது மாம்,

இதனாற் பேரின்பத்தை யெய்துவா ரிவரென்பது கூறப்பட்டன. (க)

அருளேபோதாதோ, அதற்குமேலாகியநேயமேனென்னில்?

இருவர் மடந்தையருக் கென்பயனின் புண்டா
மொருவ னொருத்தி யுறின்.

எ-து. இருவர் மடந்தையர்க் கென்பயன்-இரண்டு ஸ்திரீகளுங்கூடினா லின்பமில்லை,—இன்புண்டாமொருவ னொருத்தியுறின்-ஒருவனு மொருத்தியுங்கூடினா லின்பமுண்டு ஆன்மாநேயத்தைக்கூடுமிடத்துப் பேரின்பமாகிய மோக்ஷமுண்டாம்.

நி-வ-உ. இரண்டுபேர் மகளிர்க்குத்தம்புணர்ச்சியால்வரும் பயனென்னை? ஓர்புருடனு மோர்மகளுந் தம்மிற் புணர்வாராயினன்றே யின்பமுண்டாவது.

உயிர்க்கும் அருட்குமுதலாயநேயம் வெளிப்படி னல்லது இன்பமுண்டாகாதென்பதுபொருள். ஒருவனொருத்தியென்னும் உவமம்தலைமையும்தன்மையும் பற்றிவந்தது. இதற்கிவ்வாறன்றி யுயிரினைப் பெண்ணியல்பினதாகவும் இறைவனை யாணியல்பினதாகவும் அறிவில்லார் கூறுமது பொருளன்று, அன்னவியற்கை அசேதனவடிவிற்கல்லது சேதனவடிவிற் கின்றாதலான்.

இதனாற் பேரின்பத்தினையெய்து மெல்லைகூறப்பட்டது.

ஆன்மா நேயத்தைக்கூடுமிடத்து இவனாலேநேயத்துக்கின்பமுண்டோ வென்னில்?

இன்பதனை யெய்துவார்க் கீயு மவர்க்குருப
மின்பகன மாதலி னாலில்,

எ-து. இன்பதனை யெய்துவர்க்கீயும் - இன்பத்தைப்பெற வேணு மென்றவர்களுக்குக் கொடுப்பர்,—அவர்க்குருபமின்பகனமாதலினாலில்-அந்தச் சிவனுக்குப் பேரின்பமே சொரூபமாகையினாலே இன்பமொருவர்கொடுக்கவேண்டியதில்லை.

நி-வ-உ, தன்னைவந் தடையுமவர்க்குப்பேரின்பத்தினைவழங்கும் அவ்விறைவன் தனக்குவடிவம்ஆனந்தமயமாதலால்,தான் தன்னை நுகர்வதில்லை.

அநாதியே யாணவமலத்தால் மறைப்புண்டு அதுநீங்கியிப் பொழுது நவமாக வந்ததுபோலக் கருது முயிர்கள்போலாது, இறைவன் அநாதிமலமுத்தனாதலான் அவற்கில்லையென் றருளிச் செய்தார். புதிதாக வந்ததன்றென்பது கருத்து.

இதனு லுயிர்களுக்குக் கொடுப்பதன்றி யிறைவன் தானுமவ்வின்பத்தினை நுகர்வனோவென்னுஞ் சங்கையினையகற்றிக் கூறப்பட்டது, (௩)

அந்நியமாயிருந் தவ்வின்ப மனுபவிப்பனோவென்னில்?

தாடலைபோற் கூடியவை தானிகழா வேற்றின்பக்
கூடலை நீ யேகமெனக் கொள்.

எ-து. தாடலைபோற் கூடியவை-எவ்வுந் தவ்வுந் தோன்றுமை டவ்வாய்நின்றதுபோல,—தானிகழா வேற்றின்பக்கூடலை-தற்போதஞ் சீவியாதவிடத்திலே விளங்கப்பட்டபேரின்பத்தை,—நீயேகமெனக்கொள்-நீ யொன்றென்றே யறிவாயாக.

பி-வ-உ. தாள்தலையென்னுஞ் சொல்லிரண்டுந்தம்பொருள் பிரிந்து தோன்றுது பொருந்தியவாறுபோல், புணர்ச்சிக்கணொருகாலு முண்டாகாத வேற்றுமையினையு மின்பத்தினையுமுடைய கலப்பினை யிறைவனோ டொன்றுதலெனக் கொள்வாயாக மாணவகனே?

அச்சொற்கள் ஒரொருகாற் பிரிதலும்; புணர்வாற்றும்பெறும்பயனின்மையுங் கருதி, யிவை யன்னவல்லவென்பதற்குநிகழாவேற்றின்பக் கூடலென் றருளிச்செய்தார். தாளுந்தலையுமென்னுஞ் சொற்களாற் கூறியது, உயிரினது தாழ்வு மிறைவனது உயர்வுங் காட்டுதற்காம்.

இதனுல் ஞேயத்தழுந்தி யொன்றுபட்டு நிற்குநிலை கூறப்பட்டது. (௪)

பின்னம் ஏகப்பெறு என்னில்?

ஒன்றாலு மொன்றா திரண்டாலு மோசையெழா
தென்றாலு மோரிரண்டு மில்.

எ-து. ஒன்றாலு மொன்றாது - ஆன்மாவுஞ் சிவனுமொன்றென்று சொல்லுவாயென்னில் அப்பொழுது பெறுவானும்பேறுமில்லை,—இரண்டாலு மோசையெழா தென்றாலும் - ஆன்மாவுஞ்சிவனு மிரண்டென்று சொல்லுவாயென்னில் ஆன்மாவுஞ் சிவனு மேகத்துவமாகிய சாயுச்சியமு மில்லையென்றாம். இப்படியாகையினாலேயோ,—ஓரிரண்டுமில் - துவிதாத்துவிதமில்லை.

நி-வ-உ. இறைவனையு முயிரினையு மொன்றென்போமாயினும் பின்னர்ப் பொருந்தவேண்டுவதில்லை, இரண்டென்போமாயினுந் தம்முட்டாக்கிய வொலியெழுதலைச்செய்யாது, ஆதலாலொரு பொருளுமல்ல விரண்டாவதுமில்லை.

இதனா லிறைவனையும் உயிரினையுமேக மென்பாரையு மிரண்டென்பாரையு மறுத்து அத்துவிதங்கூறப்பட்டது. அத்துவிதமாவது தம்மிற் கலப்பா லநந்நியமாயிருத்தல். (௫)

கூடிப்பொருந்துங் கொள்கையாதாமென்னில்?

உற்றாரும் பெற்றாரு மோவா துரையொழியப்
பற்றாரு மற்றார் பவம்.

எ-து. உற்றாரும்-அந்தப்பொருளைப் பொருந்தினேனென்கிறவர்களும்,—பெற்றாரும் - அந்தப்பொருளைப் பெற்றேனென்கிறவர்களும்,—ஓவாது - கூடாது,—உரையொழிய-இந்தவிரண்டுவசனமு நீங்க, பற்றாரும் - இந்தப் பற்றுக்களற்றவரோ,—அற்றார்பவம்-அவர்களே சநநமரணங்களை நீக்கி நிட்டையைப்பொருந்தின நாதாக்கள்.

நி-வ-உ. பேரின்பமாகிய முத்தியினை யடைந்தாரும், அதற்கு நேரே காரணமாகிய சமாதியை யடைந்தாரும், மெய்ப்பொ

ருளினை யொருகாலுநீங்குதல் செய்யார். அவ்வாறுவாக்கிறக்கும்படி அதனைப்பற்றி நில்லாதாரும்பிறப்பினையற்றவர்.

உரையொழியப்பற்று மென்றதனல் கேட்டல் சிந்தித்தல் தெளிதலாகிய நிலையின்கண் நிற்பமென்பதாம். பிறப்பற்றுமென்பது பதமுத்திகளை யடைவாமென்பது கருத்து.

இதனல் வீட்டினையடைவாரது வகைமை கூறப்பட்டது.

உரையொழியப்பெற்றதென்போல வென்னில்?

பேயொன்றுந் தன்மை பிறக்கு மளவுமே
நீயொன்றுஞ் செய்யாம னில்

எ-து. பேயொன்றுந்தன்மைபிறக்குமளவும்-பேய்பிடியுண்டவன் முறைமை வருமளவும்,—நீயொன்றுஞ் செய்யாமனில்—உனக் கந்தச்சிவானுபூதி பிறக்குமளவு மான்மபோதஞ் சீவியாமலப்பொருளிலே நிற்பாயாக.

நி-வ-உ. பேய் பிடியுண்டோரது தன்மை யுனக் குண்டாமளவு நீ மேல் யாதொருசெயலுஞ் செய்யாதசைவற நிற்பாயாக

பேய்பிடியுண்டாரது செயலெல்லாம் பேயின்செயலாமாறு போல வுன்செயலனைத்தும் இறைவன்செயலாமளவு மென்பது கருத்து. பின்னரச்சாதனையின்றென்பதாம். இனியென்றதனுன் முன்னர்ச் செய்யவேண்டுவ வனைத்துஞ்செய்து முற்றியதென்பதும் பின்னிலைக்குச் செயலின்மையே வேண்டுவதென்பதுங் கண்டுகொள்க.

இதனற் சமாதிசெய்வோர்க் கதுமுதிர்ந்து கைவருமாறு கூறப்பட்டது. (எ)

பொருள்பெறுவார் செயல்போவ தென்போலவென்னில்?

ஒண்பொருட்க ளுற்று ருஅபபனே யல்லாது
கண்படுப் போர் கைப்பொருள்போற் காண்.

எ-து. ஒண்பொருட்க ணுற்றார்க்கு-நேயத்தைப் பொருந்தின ஞாதாக்களுக்கு,—உறுபயனேயல்லாது - நேயமொன்றுமேயல்லாமல் மற்றக்கிரியைகள் செய்வாரோவென்னில்?—கண்படுப் போர் கைப்பொருள்போற்காண் - நித்திரைபண்ணினவன் கையிற் பதார்த்தம்விழுந்தது தெரியாததுபோல.

நி-வ-உ. ஒள்ளியதாய மெய்ப்பொருளினது எல்லையைத் தலைப்பட்டார்க் கவ்விடத்தேயும் பேரின்பமேயன்றி மற்றுள்ள யோகமுதலிய தொழில்களியாவும் உறங்குவோர்கையிற் பண்டம்போல மெல்லெனத் தன்வயத்திலே நீங்குவதாக வறிதி. தாமேவலிது நீப்பதன்றென்பதாம்.

இதனு லவர்சமயாசாரம்நீங்குமுறைமைகூறப்பட்டது.
கூடியது கூறலாமோவென்னில்?

மூன்றாய தன்மை யவர்தம்மின் மிகமுயங்கித்
தோன்றாத வின்பமதன் சொல்.

எ-து. மூன்றாயதன்மை-ஞாதுரு ஞானஞேயந் தோன்றாதவிடத்திலே,— அவர்தம்மின் மிகமுயங்கி-அந்தச்சிவனிடத்திலே மிகுதியும்பிரியப்பட்டு,—தோன்றாதவின்பமதன் சொல்-ஆன்மபோதத்தாலே யறியப்படாத பேரின்பத்தைச்சொல்லப்படாது.

நி-வ-உ. ஞாதுரு ஞானஞேயமென்னுமூன்றுவகைப்பட்ட தன்மையுஞ் சிவசீவபாவங்களிரண்டுந் தம்மின்மிகவுங் கூடிய கலப்பினாற் றோன்றுதலைச் செய்யாத வின்பமவ்விடத்து வார்த்தைதயாது.

இதனு லவ்வானந்தமிகுதியின் அதிசயங்கூறப்பட்டது,
எவ்வா றப்பொருளெய்துவதென்னில்?

இன்பி னினிதென்ற லின்புண்டே லின்புண்டா
முன்பு நிலையே யது.

எ-து. இன்பிலினி தென்றல்-எல்லாவின்பத்துக்கு மேலா னதேதெனிற் பேரின்பம்,—இன்புண்டே லின்புண்டாம் - அந் தப் பேரின்பத்திலே சிரத்தையுண்டான வந்நேரமே யன்புநிலை யுண்டாம்;—அன்புநிலையேயது குரு லிங்க சங்கமத்திலே பத்தி யுண்டாகவே பேரின்பம் விளங்கிநிற்கும்.

நி-வ-உ, எல்லா வின்பங்களினு மினிமை யுடைத்தென்று சிறப்பித்துச் சொல்லப்படும் பேரின்பமாவ தொருவற் கன்பெ ன்ப திப்பொழுதுண்டாயி னிப்பொழுதே யுளதாம் அது மிக்க வன்பினது நிலையே தனக்குநிலையாக வுடையதாகலான்.

இன்பென்றபொதுமையா லுயிர்தநுகர்ச்சி முதலாயினவெ ல்லா மடங்கும் ஏகாரந்தேற்றம்.

இதனு லன்புடையார்க் கப்பேரின்ப மெளிதினி னெய்து மென்பது கூறப்பட்டது. (ல)

இன்புறுநிலை முற்றிற்று.

கூ-வது ஐந்தெழுத்தருணிலை.

அஃதாவது, ஐவகைப்பட்ட திருவெழுத்தாகியஅருளினது முறைமை. இதனையு மோர்திருவருளாகக் கூறியருளினார்வீட்டு நெறி காட்டுதலால்; அவ்வாறே சமாதியினை யடைதல் கூடாதா ர்க்கிதனை விதிப்படியோதவே யந்நிலை கூடுமோதலின் மேலையதி காரத்தினே டியையுடைத்தெனக் கொள்க.

உணாயிறந்தவின்பங் கூடாதாயின் மேலோருபாய மருளிச் செய்கிறார்.

அருணூலு மாரணமு மல்லாது மைந்தின்
பொருணூ றெரியப் புகும்.

எ-து. அருணூலு மாரணமு மல்லாதும் - கிருபையுடனே கத்தா வருளிச்செய்த விருப்பத்தெட்டாகமும் நாலுவேதமும் இதுகளல்லாமற் சொல்லப்பட்ட பலசாத்திரங்களு மென்னத்தைச் சொல்லுமென்னில், ஐந்தின் பொருணூ றெரியப்புகும்- பஞ்சாக்ஷரத்தி னுண்மையைச் சொல்லவந்ததால்.

வி-வ-உ. சைவாகமங்களினது கருத்தினையும், வேதங்களினது கருத்தினையும், இவை யிரண்டுமெல்லாத பல கலைகளினது கருத்தினையும் கற்று வல்லோ ராராயப்புகுவாராயின் அவையெல்லாந் திருவெழுத்தைந்தின் பொருளாகியபதி பசு பாசங்களைச் சொல்லுநூல்களாம்.

இதனு லெல்லாநூற்பொருள்களும் இவ் வைந்தெழுத்தினுள்ளே யடங்குமென்பது கூறப்பட்டது. (௧)

இந்தப் பஞ்சாக்ஷர மென்னத்தைச் சொல்லுமென்னில்?

இறைசத்தி பாச மெழின்மாயை யாவி
யுறநிற்கு மோங்காரத் துள்.

எ-து. இறை-கத்தாவும்,—சத்தி - திருவருளும்;—பாசம்-ஆணவமலமும்,—எழின்மாயை - விளக்கமான திரோதானமும்,— ஆவி-ஆன்மாவும்,—உறநிற்கு மோங்காரத்துள்-பிரணவத்திலே நிற்கும்.

வி-வ-உ. சிவனும், சத்தியும், ஆணவமும், அழகுடைத்தாய மாயையும், ஆன்மாவும், ஆகியஐந்தும் ஐந்தெழுத்தோரெழுத்தாகிய பிரணவத்தினுள்ளே யமைந்துநிற்கும்.

இதனுல் பிரணவமென்று பேர்பெற்றுநிற்கு நுண்ணியவைந்தெழுத்தின தியல்பு கூறப்பட்டது.

இந்தப்பஞ்சாக்ஷரம் நிற்குந்தான மெங்ஙனே யென்னில்?

ஊன நடன மொருபா லொருபாலா
ஞானநடந் தானடுவே நா௫.

எ-து. ஊன நடன மொருபால்-மலமுந்திரோதமு மொரு பக்கலாகவும்,—ஒருபாலாஞானநடம் - அருளுஞ் சிவமுமொரு பக்கலாகவும்,—தானடுவே-ஆன்மா விந்தவிரண்டுக்குநடுவேநிற்பன்,—நாடு-அறிவாயாக.

நி-வ-உ. பிறப்பினைவிளைக்கு நகார மகாரங்களாகிய கூத்தொரு மருங்காகவும், வீட்டினை யுதவுஞ் சிகார வகாரங்களாகிய கூத்தொருமருங்காகவும், யகாரமாகிய ஆன்மா இவ் விருவகைக்கு நடுப்பட்டதொன்முகவும் விசாரித்தறிவாயாக.

கூத்தென்றது உயிர்களைப் பெத்த முத்திகளி லுய்த்து நடத்தலை.

இதனு லைந்தெழுத்தின் பொருளியல்புகூறப்பட்டது. (ரு)

இந்தப் பஞ்சாக்ஷரமிருக்கையினுலே யான்மா நேயத்தைப் பெருமலிருப்பா னேனென்னில்?

விரியமன மேவியவ்வை மீளவிடா சித்தம்
பெரியவினை தீரப் பெறும்.

எ-து. விரியமனமேவி-மனமானது பிரபஞ்சத்திலே விரிந்துபொருந்தி,—யவ்வைமீளவிடா-யவ்வாகிய வான்மாவை யருளினுலே திரும்பாதபடி பண்ணுவிக்கும்,—சித்தம் பெரியவினை தீரப்பெறும்-ஆன்மாவுக்கு மகத்தாகிய புண்ணியபாவமிரண்டுந் துலையொத்தவிடத்திற் பேரின்பமாகிய மோக்ஷமுண்டாம்.

நி-வ-உ. மகார நகாரமாகிய மலமும் திரோதமு மிகவுமிறுகப்புணர்ந்து யகாரமாகிய வுயிர்களைத் திரும்பவிடா; அவ்வுயிர்கள் தம் பெரியபிணியாகிய மலவிருள்தீருங்கால் சிகாரமாகிய சிவத்தினையடையும்.

மலந்திரவே திரோதந்தானே நீங்குமென்பதாம். வினைஎன்பது ஈண்டுப் பிணியென்னும் பொருள்தந்து நின்றது.

இதனாற் சட்டுவீடென்னு மிரண்டும் ஐந்தொழித்தினுனே யமையுமென்பது கூறப்பட்டது. (ச)

இந்தப் பஞ்சாக்ஷர மிருக்கையிலே யாணவமல நீங்காமலி ருப்பானேனென்னில்?

மாலார் திரோத மலமுதலாய் மாறுமோ
மேலாசு மீளா விடின்.

எ-து. மால்ஆர்திரோத மலமுதலாய்மாறுமோ-மயக்கமாகிய நகாரமுன்னாகச்செபித்தான்மலநீங்காது. ஆனால்நீங்குகிறமுறை மை யெப்படியென்னில்?—மேலாசு மீளாவிடின்-ஆணவமலத் தைக் கீழ்ப்படுத்தி நகாரமேற்படச் சிகாரமுன்னாக மாறிச்செ பிக்கின் மோக்ஷமாம்.

நி-வ-உ, மயக்கத்தினைப் பொருந்திய திரோதானமு மல முமாகிய நகாரமகாரம் இரண்டும் ஆதிக்கண்ணதாக வுச்சரிக்கில் அவைகள் நீங்குமோ, இவற்றைக் கீழாக்கிச் சிவமாகிய சிகார மேலாம் வண்ணமாற்றி யுச்சரியாதொழியின்.

இதனால் நகாரமகாரங்களை முதலாகவுச்சரித்துவழங்குவது வீட்டினையடைவோர்க் காகாதென்பது கூறப்பட்டது.

பஞ்சாக்ஷரத்தைச்செபித்தபேர்க்கு மலநீங்குமோவென்னில்?

ஆராதி யாதார மந்தோ வதுமீண்டு
பாராது மேலோதும் பற்று.

எ-து. ஆராதி-ஆராதனை பண்ணுவாய்,—ஆதாரம்-நமக்கா தாரஞ் சிவனென் றறியாமலிருக்கிறதற்கு,—அந்தோ-ஐயோ,— அதுமீண்டுபாராது மேலோதும்பற்று - இப்படிச் சிகாரமுன்னா கச் செபித்தான் மலமுந் திரோதமுமிவனைவந்து பொருந்தாது.

நி-வ-உ, தமக் காதார மாருகவெண்ணி யவ்வா றுச்சரித்த லால் வரும்பழுதினைத் திரும்பிவிசாரியாம லந்தோ நகாரமகார ங்களை மேலாகவுச்சரிக்கும விருப்பம்,

இதனு லவ்வாறோதுவார் துணையின்றித் துன்புறதற் கிரங்கிக்கூறப்பட்டது. (சு)

இந்தப் பஞ்சாக்ஷரத்தைச் செபிக்கிற தேதென்னில்?

சிவமுதலே யாமா று சேருமேற் றீரும்
பவமிதுநீ யோதும் படி.

எ-து. சிவமுதலேயாமாறு சேருமேல்-இப்படிச்சிகாரமுன்னகச் செபித்தாயானல்,—தீரும்பவம் - சனனமுநீங்கும்,—இது நீயோதும்படி-இதுநீசபிக்கப்பட்டமுறைமை. (எ)

நி-வ-உ. சிகார வகாரமென்னு மிரண்டு மாதிக்கண்ணதேயாம் வண்ண முச்சரித்தல் கூடுமாயின். அந்நிலையே யுனது பிறவித்துன்பநீங்கும், மாணவகனே! வீட்டினைக்காமுற்றநீ யுச்சரிக்குமுறைமையிது.

இதனல் முத்தரோதுமாறு கூறப்பட்டது.

இப்படி சபிக்கப்பட்ட வான்மாக்களுக்குப் பிரயோசனமேதென்னில்?

வாசி யருளியதை வாழ்விக்கு மற்றதுவே
யாசி லுருவமுமா மங்கு.

எ-து. வாசியருளியதை வாழ்விக்கும் - வகாரமாகிய திருவருள் யகாரமாகிய வான்மாவை சிகாரமாகிய சிவத்திலே கொடுத்துப் பேரின்பமாகிய சுகத்தை யுண்டாக்கும்,—மற்றதுவேயாசி லுருவமுமாமங்கு - அந்தத் திருவருள்தானே குற்றமில்லாத திருமேனியாயிருக்கும் அந்தவான்மாவுக்கு.

நி-வ-உ. அவ்வா றுச்சரிக்குங்கால், வகாரமாகியவருள்சிகாரமாகிய சிவத்தினைக்காட்டி யகாரமாகியவுயிரினை வீட்டின்பத்திலே யிருத்தும். அன்றியும் அவ்வருளே யந்தச்சிவத்திற்குக்குற்றந்தீர்ந்த திருமேனியாயிருப்பது.

இதனால் திருவெழுத்தைந்தில் வகாரமாகியவருளினது தன்மை வகுத்துக்கூறப்பட்டது. (அ)

அந்தவான்மாமோக்ஷத்திலேயிருக்கிறதெப்படியென்னில்?

ஆசினவா நாப்ப ணடையா தருளினால்
வாசியிடை நிற்கை வழக்கு.

எ-து. ஆசினவா நாப்பனடையாது - குற்றத்தைப்பொருந்திய நகாரத்திலு மகாரத்திலும் பொருந்தாமல்,—அருளினால்-ஆசாரியனுடைய கிருபையினால்,—வாசியிடைநிற்கை வழக்கு-அருளுக்குஞ் சிவத்துக்கு நடுவே நிற்கிறதேமுறைமை,

நி-வ-உ. குற்றந்தீர்ந்த திரோதானமும் அருளுமாகியநகார வகாரங்கட்கு நடுப்பட்டுநில்லாது வகாரமாகியவருளினாலேயகாரமாகியவுயிர் அவ்வகாரத்திற்குஞ் சிவமாகிய சிகாரத்திற்கு நடுப்பட்டுநிற்பது முறைமை.

அவ்வா றதற்கெழுத்துக்களைமாறி யுச்சரிப்பது குருமுகத்தாற்றெளிந்துகொள்க. ஆன்மாவைமறைக்கும் பாசங்களைச்செலுத்துவதன்றி திரோதானசத்தி தானாகமறையா தென்பதற்கு ஆசினவென் றருளிச்செய்தார்.

இதனாற் றிருவெழுத்தினைக் கூறிய முறைமையி னேதுவாரடைந்துநிற்கு நிலைகூறப்பட்டது. (கூ)

ஆசினவா என்பதற்கிருவகை யுரையாசிரியர் கூறியபேதங்களை யூகித்தறிக.

மோக்ஷத்திலே யிருக்கிறதற்குப் பிரத்தியக்ஷ முண்டோவென்னில்?

எல்லா வகையு மியம்பு மிவனகன்று
நில்லா வகையை நினைந்து.

எ-து. எல்லாவகையு மியம்பும் - வேதாகமங்க ளெல்லாஞ் சொல்லுகிற தேதென்னில்,—இவனகன்றுநில்லாவகையயினை

ந்து-ஆன்மா சிவசத்தியினை விட்டுநீங்காத முறைமையைச்சொல்லும்.

வி-வ-உ. எவ்வகைப்பட்ட வுபாயங்களினையு நூல்களுணாக்கும், இவ்வாருன்மாவானவன் சிவசத்தியினை நீங்கிநில்லா துடனுய்நிற்குந் திறத்தினைக்கருதி.

இதனு லறியுநெறிமுதல் இவ்வதிகாரமீருன நான் கதிகாரத்தினது கருத்துந் தொகுத்துக்கூறப்பட்டது. (ம)

ஐந்தெழுத்தருணிலை முற்றிற்று.

ம-வது அணைந்தோர்தன்மை.

அஃதாவது, இவ்வகைப்பட்டசமாதியினையடைந்தோரது தன்மை. மேலையதிகாரங்களாற் சமாதிகூடுமுறைமைகூறியது கூடினோரது தன்மையிதனுற்கூறிதலின், அவற்றேடிதற்கியைபுடைத்தெனக் கொள்க.

நேயத்தைவிட்டுநீங்காத ஞாதாக்களினை வேறென்னில்?

ஓங்குணர்வி னுள்ளொடுங்கி யுள்ளத்து ளின்பொ
தூங்குவர்மற் றேதுண்டு சொல். [டுங்கத்

எ-து. ஒங்குணர்வி னுள்ளொடுங்கி யுள்ளத்து ளின்பொடுங்க - மகத்தாகிய சிவத்திலே யான்மாவொடுங்க ஆன்மாவிலே சிவமொடுங்க,—தூங்குவர்-பேரின்பந் தானுகவழுங்குவர்,—மற்றேதுண்டுசொல்-நேயமேயல்லது மற்றெருநினைவுமில்லை.

வி-வ-உ. நிறைந்த ஞானத்தினுள்ளே தாம்அடங்கித் தம்மறிவினுள்ளே பேரின்பமடங்கும்படி யாநந்தநித்திரை பண்ணுநிற்பர், மற்றவார்த்தையாதுளதாம்.

அவ்வின்பம் இறைவற்கின்றி யுயிர்கள் தாமே நுகர்தலின், உள்ளத்திலின்பொடுங்கவென்றும், ஞேயத்தழுந்தினுஞானத்தின் மிக்கா ரன்றென்பதற்கு ஒங்குணர்வினுள்ளடங்கியென்று மருளிச்செய்தார்.

இதனாலவர் ஞேயத்தழுந்திநிற்கு மியல்பு கூறப்பட்டது.

இப்படிநின்றவர்கள் மேலானபதங்களையும் விரும்புவார்களோவென்னில்?

ஐந்தொழிலுங் காரணங்க ளாந்தொழிலும் போக
வெந்தொழிலு மேவார் மிக. [நுகர்

எ - து. ஐந்தொழிலும் - பஞ்சகிருத்தியமும்,—காரணங்களாந் தொழிலும்-காரணேசுரர் தொழிலாகிய சாலோகாதிபதங்களையும்,—போக நுகர் வெந்தொழிலும்-போகத்தைக் கொடுக்கத்தக்க கொடிதாகிய சுவர்க்காதி பதங்களையும்,—மேவார்மிக-மிகவும் பொருந்தார்கள்.

நி - வ - உ. பரமசிவனாற் செய்யப்படும் படைப்பு நிலையிறுமறைப்பு அருளென்னும் ஐந்தொழில்களையு மொருங்கே செய்தலும், அயன் மால் உருத்திரன் மகேசன் சதாசிவனென்னுமிவரிலொருவற்கு மொரோவொரு தொழிலைச்செய்தலும், மாயாபோகத்தினையருந்தும் பிறப்பிற்கேதுவாகிய வெய்ய தொழிலினைச் செய்தலுஞ் சிறிதும் பொருத்தாரவர்.

அசஞ்சலமா யகண்டமாயொழிவற நிறைந்தஞானவடிவினராய்நின்றும் பரமானந்தத்தினை யனுபவித்திருக்கு மொன்றிற்குமே யுரியா ரென்பது கருத்து. மிகவென்பது குறிப்பு மொழியாய்ச் சிறிது மென்னும் பொருள் விளங்க நின்றது. "உயிர்தானுஞ் சிவானுபவ மொன்றினுக்கு முரித்தே" என் றருளிச்செய்தவாறு காண்க.

இதனாலவர் மற்றொரு தொழிற்கு முரியாரல்ல ரென்பது கூறப்பட்டது. (உ)

சர்வஞ்ஞத்து வாதிகுணங்கள் வந்து பொருந்தினாலோவென்னில்?

எல்லா மறியு மறிவுறினு மீங்கிவரொன்
றல்லா தறியா ரற.

எ-து. எல்லாமறியு மறிவுறினும்-சருவஞ்ஞத்து வாதிகுணங்கள்வந்து பொருந்தினாலும்,—ஈங்கு-இவ்விடத்திலே,—இவர்-இந்நாதாக்கள்,—ஒன்றல்லா தறியாரற - ஞேயமொன்றுமேயல்லது மற்றொன்றையும் பொருந்தி யறியமாட்டார்கள்.

வி-வ-உ. இயல்பினான் முழுவதூஉ முணரு ஞானமானது வெளிப்பட்டுத் தம்மையிரண்டறக் கலந்துநிற்பினு மிவ்விடத்திந்தச் சீவன்முத்தரானவரானந்தஞானமொன்றுமேயன்றிப் பிறிதொரு பொருளினையுஞ் சிறிது மறிதல்செய்யார்.

அற என்பது மிகவென்பதுபோலக் குறிப்பு மொழியாய் நின்றது. சீவன்முத்தர் சிவ மொன்றுமே யன்றிப் பிறிதொன்று மறியாராகவே பரமுத்தருமவ்வாறுதல்கூறவேண்டாவாயிற்று.

இதனாலவர் பிறிதொன்றுமறியா தெவ்விடத்துஞ் சிவமே கண்டிருத்தல் கூறப்பட்டது. "பாஞானத்தால்" என்பதனுள் "சீவன்முத்தர் பரமேபார்த்திருப்பார்" என்றருளிச்செய்தவாறு காண்க. (ஙு)

இப்படிக்கொத்த நாதாக்களை விடயங்கள்வந்து பொருந்தினாலோ வென்னில்?

புலனடக்கித் தம்முதற்கட் புக்குறுவர் போதார்
தலநடக்கு மாமை தக.

எ-து. புலனடக்கித் தம்முதற்கட் புக்குறுவர் - விடயங்கள் வந்து பொருந்தினாற் றமக்குப் பிராணனாகிய ஞேயத்திலேயடங்கி

நிற்பார்கள்,—போதார் - ஒரு விடயத்திலுங் கர்மித்துப் புரியார் கள். அஃ தென்போல வென்னில்?—தலநடக்கு மாமைதக-பூ மியிலே நடக்கப்பட்ட வாமையானது ஆரவாரமில்லாத விடத் திலே நடக்கும், ஆரவாரமுள்ள விடத்திலேயடக்கு மதுபோல.

வி-வ-உ ஓர்விடய மெதிரிடுங்கால் அதற்கஞ்சி யதன்மேற் செல்லுந் தம்முணர்வினை மாற்றித் தமது முதலாகிய ஞேயத்தி னிடத்திலே புக்குப்பொருந்தி மறித்து நீங்குதல்செய்யார், அவர் பூமியின்கண்ணே நடந்துசெல்லுங்கா லொருவனெதிர்ப்படி னவ னையஞ்சித்தன் றலையினைச்சுரித்துள்ளேவாங்கியசைவறக் கிடக்கு மாமையினையொப்ப.

ஆமை பின்ன ரெதிர்ந்தோரகலுங்காற் றன்றலையினை வெ ளிப்படுத்திச் செல்லுமதுபோ லிவர் விடைவிற்றிரிபு படாமை யிற் போதாரென் றருளிச்செய்தார்.

இதனலவர் புலனுணர்வுக்கஞ்சி யகலுமாறு கூறப்பட்டது.

அப்படிச் சிலர் ஞேயத்தைவிட்டு நீங்கி யிருப்பர்களோவெ ன்னில்?

> அவனையகன் றெங்கின்று மாங்கவனு யெங்கு
> மிவனையொழிந் துண்டாத லில்.

எ-து. அவனையகன் றெங்கின்று மாங்கவனுய் - அந்தச் சிவனை விட்டுநீங்கி யான்மாவுக் கிருக்கவிடமில்லை. அந்தச்சிவன் றானுய்,—எங்கும்-சட சித்துக்களெல்லாம்,—இவனை யொழிந்து ண்டாதவில்-இந்தச்சிவனையல்லா தான்மாநில்லாது.

வி-வ-உ. இறைவனை நீங்கி யெவ்வுலகமு நிற்பதில்லை, அது போல விறைவனுதலடைந்த விம்முத்தான்மாவையன்றி யெவ்வி டமுமுளதாய் நிற்றலில்லை.

இவனு மிறைவனைப்போல வியாபகனுய்நிற்குமென்பதாம். "காயங்கழிந்தக்கா லெங்குமாய்க் கருத்தாப்போல்நிற்பன்" என் றருளிச் செய்தவாறுகாண்க.

இதனாலவர் சிற்றறிவுநீங்கிப் பேரறிவுடையரென்பதுகூறப்பட்டது. (ரு)

ஆனால் அந்தப் பொருளை யுள்ளே கண்டிருப்பார்களோ புறம்பே கண்டிருப்பார்களோ வென்னில்?

உள்ளும் புறம்பு மொருதன்மைக் காட்சியருக்
கெள்ளுந் திறமேது மில்.

எ-து. உள்ளும் புறம்பும் - அந்தரங்கத்திலே யறிவாய்விளங்கியிருக்கப்பட்டதிருவருளையும், புறம்பேகுருவாகித் திருமேனிகொண்டுவந்த வாசாரியனையும்,—ஒருதன்மைக் காட்சியருக்கு-ஒருபொருளென்று தரிசித்தவர்களுக்கு, எள்ளுந்திறமேதுமில்-உள்ளென்றும் புறம்பென்று நீக்கவிடமில்லை.

வி-வ-உ. அகமும்புறமு மொருதன்மைத்தாய் நிற்கு ஞானத்தினை யடைந்தோருக் கொன்றனை யிகழ்ந்திடும்வண்ண மெவ்வாற்றானு மில்லை.

இதனாலவர்க் கெல்லாப்பொருள்களு ஞானமாயே தோன்றுதல் கூறப்பட்டது.

வேறு. ஆனா லிந்திரியங்களினா லறியுமறிவாலுஞ் சிவனைத் தரிசிக்கலாமோ வென்னில்? தனக்குப் பிராணனாய்நின் றுபகரிக்கிறதன்மையையு மவ னவ ளதுவாய்நின் றுபகரித்தும் பின்பாசாரியமூர்த்தியாய்நின்று மிரக்ஷிக்கிற பூரணமான பொருளை விசுவமானது மறையும்படி யொரு நீர்மையாகக் கண்டவர்களுக்குச் சிவனதுதிருவடியை நீங்குகைக்கு வழியில்லை.

இது ஞானவான்கள் பிரபஞ்சம்தோன்றுமவ னிற்கு முறைமை. (சா)

ஆனாலிப்படி நீக்கமறநிற்கிற நாதாக்களுந் தொழிற்படுவோர்களோ வென்னில்?

உறுந்தொழிற்குத் தக்க பயனுலகந் தத்தம்
வறுந்தொழிற்கு வாய்மை பயன்.

எ-து. உறுந்தொழிற்குத்தக்க பயனுலகந்தத்தம் - உலகத்திலே யிருக்கப்பட்ட வான்மாக்கள் செய்த வேலைக்குத்தக்க கூலிகொடுப்பார்கள், அதுபோல,—வறுந்தொழிற்கு வாய்மைபயன்-தொழிலற்ற நாதாக்களுக்குச் சத்தியமாகிய நேயமொன்றுமே பிரயோசனம்.

நி-வ-உ. தன்னையாற்றிய தலைவரைப்பின்றொடர்ந்திருழும் யானெனதென்னுஞ் செருக்காற் செய்யப்பட்ட வினைக்கேற்ற பயனுவ திலகவாழ்க்கைகள், செருக்கினைநீங்கித் தம்மை யிகழ்ந் தோர்செய்யுந் தானந்தவமுதலிய தொழிற்குவரும் பயனுவதழிவி ல்லாத வீட்டின்பமே.

தக்கபய னென்றதனுல் பயன்பல்வாயிற்ற. வறுந்தொழி லென் றருளிச்செய்தார். தொடர்ந்துபயன் வழங்காமையின். இத னுல்வரோர் தொழிலினைச்செய்யினும் பிறிதொருகாமியத்தினைக் கருதிச்செய்யாரென்பது கூறப்பட்டது.

வேறு. ஆனல் தொழிலாலுஞ் சிவனைக் கூடலாமோவென் னில்? பிரபஞ்சத்திற் தத்தந் தொழிலுக்குத்தக்க பிரயோசனங்க ளிவர்களுக்குண்டா மாறுபோல வொன்றுஞ் செய்யாதசெயலுக் கந்தவுண்மை பிரயோசனம்.

இந்தவுண்மையிலே நின்றவர்களுக் கொருசெயலுங் கூடா தென்ப தறிவித்தது. (எ)

பிராரத்துவம் புசிக்கச்செய்தே யாகாமிய மேறுதோவென் னில்?

> ஏன்ற வினையுடலோ டேகுமிடை யேறும்வினை
> தோன்றி லருளே சுடும்.

எ-து. ஏன்றவினையுடலோடேகும்-பிராரத்தம் தேகத்துட னேபோம், சஞ்சிதம் தீட்சையிலேபோம்,—இடையேறும்வினை தோன்றி லருளேசுடும் - பிராரத்தம் புசிக்கச்செய்தே கட்டுப்படு கிற வாகாமியஞ் சிவஞானம் விளங்கவே நீங்கும்.

நி-வ-உ. பக்குவப்பட்டமைந்த வினையானதுடம்பிற்கமை த்த கால்வரையறையிலே தொலையும், இடைப்பட்டகாலத்தில் வந்து பொருந்தும்வினைகளுளவாயி னருளென்னு நெருப்பினு லேவெந்துபோம்.

சஞ்சிதம் நீங்காமல் ஞானம்வெளிப்படாது, வெளிப்படா தாகவே யாகாமியந் தீர்வதில்லை, அதனை யருளே சுடுமென்பத னுற் சஞ்சிதமு நீங்கிற்றென்பது தானேபோதருமெனக்கொள்க. தோன்றிலென்பதனு லது தோன்றுதவண்ண மிடையறு தரு ளோடு நிற்பரென்பது கருத்து.

இதனுலவர்க்கு வினைத்தொடர்பின்றுமாறு கூறப்பட்டது.

வேறு. சஞ்சிதகன்மம் தீக்ஷையிலேபோம், பிராரத்தந்தே கத்துடனேபோம், ஆகாமியம் சிவஞானத்தினாலே சுடப்படும்.

இது ஞானவான்களுக் கொருகன்மமுமில்லையென்னுமிட மறிவித்தது.

பரமுத்தி சரீரநீங்கியோ வென்னில்?

மும்மை தருவினைகண் மூளாவா மூதறிவார்க்
கன்மையு டம்மையே யாம்.

எ-து. மும்மை தருவினைகண் மூளாவாம்-சஞ்சிதபிராரத்த மாகாமிய மிந்தமூன்றுவினையும் பொருந்தாவாம், ஏன்பொருந் தாவென்னில்? மூதறிவார்க் கம்மையு மிம்மையே யாம்-மேலா கிய சிவஞானத்தைப்பெற்ற ஞாதாக்க ளிச்சரீராந்தத்திலே பெற ப்பட்ட பரமுத்தியுஞ் சரீர மிருக்கையிலேயாம்.

நி-வ-உ. இம்மையம்மை மறுமையென்னு மூவகைப்பய னையுந்தரும் வினைகள்யாவுந் தொடரா, தம்மேலாய வறிவினையு டையார்க்கும் பிறந்தெய்து மின்பமு மதனோடு கூடி நிற்கவே யுளதாமாகலான்.

இம்மை யிப்பிறப்பு, அம்மை மேலுலகினையடைதல், மறு மை மறித்து வரும்பிறப்பு. உடம்பிறந்தகாலத்து நிலை வேறுபடு தலின்மைநோக்கி யம்மையு மிம்மையேயாமென் றருளிச்செய் தார்.

இதனால்வர்க்குச் சிறிதும் வினைத்தொடர் பின்றென்பது வலியுறுத்தப்பட்டது.

வேறு. அந்தப் பிராரத்தம் புசிக்கவேண்டுமாயின், வாக்கு மனங் காயங்களி லுண்டானகன்ம மவர் சிவசம்பாவனையாலே யவர்களைவாதியாது, பின்புண்டாஞ் சாயுச்சியமு மவர்களுக் கிப் பொழுதேயாம்.

இது சிவன்முத்தரான நிலையிலே தன்னிலே பரமுத்தியா மென்றறிவித்தது. (௧)

இவர்களுக் கான்மாக்களை யிரட்சிக்கவேணுமென்கிற கிரு பை யில்லையோவென்னில்?

கள்ளத் தலைவர் துயர்கருதித் தங்கருணை
வெள்ளத் தலைவர் மிக.

எ-து. கள்ளத்தலைவர் துயர்கருதி - கவட்டிந்திரியங்களுக்கு முதன்மையா யிருக்கிற வான்மாக்கள்படுகிற துன்பத்தைத்திரு

வுள்ளத்திலே நினைத்து,—தங்கருணை வெள்ளத்தலைவர்மிக-தமக்குக் கிருபையாகிய ஞான சமுத்திரத்திலே மிகுதியு மழுந்தி நிற்பார்கள்.

நி-வ-உ. யானென்தென்னும் வஞ்சத்தலைமையினை யுடைய வான்மாக்கள் படுந்துன்பத்தினை யெண்ணித்தம்மிடத் தெழுந்த கருணையாகிய கடலினுள்ளே மிகவுமலைதலைச் செய்வர்

அலைத லிரக்கத்தாற் றளர்தல்

இதனாலவர் வீட்டினைவிரும்பாத வுயிர்கள் மாட்டிறைவன் போ லருளுடையராதல் கூறப்பட்டது.

வேறு. ஆனால் ஞானவான்களுக்கு விடயங்களுடன் கூடிநிற்கலாமோவென்னில்? இந்திரியங்களுடன் கூடினுலுண்டான கிலேசத்தையுணர்ந்து சிவனுடைய கிருபாசமுத்திரத்திலே விழுந்து தஞ்செயலற்றது வதுவாய்விடுவார்கள்.

" மறையோன், கழுமலமுதுபதிக் கவுணியன் கட்டுரை கழுமலமுதுபதிக் கவுணியனறியு, மனையதன்மையை யாதலினின்னை, நினையவல்லவரில்லைநீணிலத்தே,, என்றவாறுகாண்க. (ய)

அணைந்தோர்தன்மை முற்றிற்று.

திருவருட்பயன் மூலமுமுரையும் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.